பொன்னிறமுகிர்ந்தோன், பொன்னிறசக்தி, see பொன்னிமிளை.

பொன்னிறம் கலந்த கரும் பூவலமருதோன்றி, மஞ்சளும், கருப்பும் கலந்த பூவுடைய மருதோன்றி, unarmed orange and black coloured nail dye — Crossandra undulacfolia.

பொன்னிற வெற்றிலை, வெற்றிலைப் பழுப்பு, மஞ்சள் வெற்றிலை, yellow betel leaf.

பொன்னீதரோகணி,

பொன்னீர்ப்பூவல மருதோன்றி, gold coloured nail dye — Lawsonia alba.

பொன்னுக்காதி, களிம்பற்ற செம்பு, copper purified which does not rust.

பொன்னுக்கு வீங்கி, சாதண்டை வீங்கும் ஓர் நோய், கூவைக்கட்டு, புட்டாளம்மை, Inflammation of the parotid gland — mumps. It is believed that it is cured by wearing a gold chain, hence the name.

பொன்னுருக்குங்காரம், பொரிகாரம், borax.

பொன்னுனி மூலி, see பொன்னுமத்தை

பொன்னுமத்தன், see பொன்னுமத்தை, இதன் பச்சைத் தழையினால் சொர்ணமதைக் காணலாகும், இதன் சாற்றைப் பிழிந்து ரவியில் காயவைத்து செம்பை யுருக்கிக் கிராசமீய பசுமையான தங்க முண்டாகும். (அக-மாஞ்) இத்தழையினால் சிங்கம், யானை முதலிய காட்டில் வசிக்கு மிருகங்களெல்லாம் மதமடங்கி வணங்கி வசியமாகும், It is useful in alchemy to transmute copper into gold. It aids to conquer wild animals, lion, elephant etc.

பொன்னுமத்தை, ஓர் வகை மஞ்சள் நிற பூவுடைய ஊமத்தை. dhatura bearing yellow flowers; 2. மருளுமத்தை. இதனால் விரணக்கிரந்தி. நாட்சென்ற கிராணி, பித்த விஷசுரம் நீங்கும். இது கொடிய நஞ்சாகையால் வைத்தியர்கள் தேகபலம், நோய் பலம் அறிந்து வெகு ஜாக்கிரதையாய் உபயோகிக்க வேண்டும். a variety of dhatura. It is poisonous, and so must be used with caution.

பொன்குண முருங்கை, ஓர் வாகை — Allizzia odoralissima.

போ

போகக்கல், செம்பாறைக்கல், a kind of red gravel rock.

போகக்களஞ்சி, பாவை, lady; 2. பெண், girl.

போகக்குளிகை, a pill to increase the virility or power of sexual intercourse.

போகசக்தி, கலவிக்குரிய ஆண்மை, power of sexual intercourse; vital power.

போகணம், பெருமருந்து, a turning plant, Indian birth wort — Aristolochia indica.

போகணி, ஓர் வாய் அகண்ட பாத்திரம், a wide mouthed metal vessel.

போகண்டன், 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்டவன், a boy from 5 to 16 years.

போகத்தானம், போகஸ்தானம், ஆனந்தமயகோசம், that state of insensibility produed by exess of joy during meditation or concentration; 2. உடம்பு, body.

போக நிதானம், புணர்ச்சிக்குரிய காலம்; time suitable for copulation.

போகபிசாசிகை, பசி, hunger.

போகப்ப விந்திரி, ஏகம்பச்சாரம், a kind of salt mineral; 2. போகம் புணர்ச்சி, intercourse. enjoyment (in Philosophy) it is the perception of objects upon which enjoyment - ensues.

போகமணிச்சாறு.

போகமிகவாசி, முட்பலாசு, a tree. see பலாசு.

போகமுண்டாக்கி, காமத்தை மூட்டும் வஸ்து drug that increases the sexual power; following are a few such drugs, நறுந்தாளி, நன் முருங்கை, தூதுளம், பசளை, அறுகிரை இதிலொன்றை புளிநீக்கி நெய்யிட்டு உண்ண நிர்வாகம் உண்டாம்.

போகம், கண்பூ, cataract of the eye; 2. இரசம், mercury; 3. பெண்போகம், sexual intercourse — Coition; 4. சாலாங்க பாஷாணம், a kind of arsenic.

போகம் விடாப்பெண், over sexed woman.

போகம் விடாப்பெண், தூரவழி நடந்தவள்; 2. தன்னை மறக்கும்படி மதுபானம் பண்ணினவள்; 3. நிர்த்தனம் செய்து இளைத்தவள்; 4. நான்காம்நாள் ருது ஸ்நானம் பண்ணினவள்; 5. தாபசுரத்தினால் மெலிவுற்றவள்; 6. கர்ப்பிணியாயிருப்பவள்; 7. நூதன புருஷனுடன் புணருபவள்; 8. அமிர்த போசனம் பண்ணினவள்; 9. பசியால் வருந்தியவள். 10. மாறுபட்ட குறியினையுடையவள்.

போகம் விளைதல், காமவிச்சை யுண்டாதல், increas of desire to have intercourse.

போகரோகனி, புல்லூரி, a parasitic plant.

போகர், ஓர் சித்தர்; இவர் தமிழ்நாட்டு வேட் கோவர் வகுப்பைச் சார்ந்தவர், இவரைச் சர்வ சாஸ்திரங்களில் துறைபோய காரணம் பற்றிப் போகர் என்று அழைப்பார்கள்; இவர் காலாங்கி நாதருக்கு முதல் மாணாக்கர்; இவர் சதுரகிரியிலுள்ள காய கற்ப மூலிகைகளால் தேகசித்தி செய்து விளங்கியவர்; இவர் எல்லா நாட்டு மொழிகளும் நன்கு தெரிந்து வாத வைத்திய யோக ஞானங்களைப் பல நாட்டிலும் பரப்பி பலநாட்டு மொழிகளையுந் திரட்டி தமிழில் (1700) ஆயிரத் தெழுநூறு பாடல்களால் ஒரு நிகண்டு செய்து தந்தவர்; இவர் புலிப்பாணி, கருவூரார், கொங்கணவர் இடைக்காடர் முதலியோருக்கு அட்டமாசித்தி முதலிய சர்வ ஞானங்களையும் போதித்த ஆசாரியராவார்; இவருடைய மாணாக்கருள் புலிப்பாணி பழனியிலும் இடைக்காடர் அருணாசலத்திலும் ஆசிரமம் கொண்டு

அமருவாராயினர்; ஆசிரியராகிய போகரோ தமிழ் மாணவர் சிலருடன் சீனதேசத்திற்குச் சென்று பல கருவி நூல்களும் இயந்திர நூல்களும் இயற்றி ஆங்குள்ளவரைப் படிப்பித்து அரசரால் மதிப்புப் பெற்றுத் திரும்பி வந்து சதுரகிரியில் அமர்ந்தார்; பிறகு அவ்விடத்தை விட்டுப் பழநி மலையை அடைந்து வாழ்வார் ஆயினார்.

இவர் செய்ததாக சப்தகாண்டம், நிகண்டு, வைத்தியம், சரக்கு வைப்பு, பல திரட்டு, கற்பசூத்திரம், உபதேசம், முப்பு சூத்திரம், அட்டாங்கயோகம், பூஜாவிதி முதலிய நூல்களும் இன்னும் பல நூல்களும் பஞ்சபட்சி சாத்திரமும் இருக்கின்றன.

போகர் சீஷன், *புலிப்பாணி*, Pulipani a disciple of Bogar.

போகர் செம்பு வித்தை, *தங்கச் செம்பு செய்யும் மார்க்கம்*, the art of transmutation of copper into gold.

போகர் பெருநூல், போகர் ஏழாயிரம் *7000* verses compiled by Bogar, a Siddhar.

போகவரிசி, *கார்போகவரிசி*, see போகி.

போக வலிமை, *பெண்ணிடம் சம்போகிக்கவுள்ள சக்தி*, the power of sexual intercourse.

போகவிச்சை, *புணர்ச்சியில் ஆசை*, liking to have intercourse.

போகவிருத்திக் கீரைகள், *நறுந்தாளி, நன்முருங்கை, தூதுவளை, பசளை, அறுகீரை*, the greens that increase the power of virility; they are given above.

போகவிருப்பம், see போகவிச்சை.

போகவிர்த்தி, *நல்லரிசி*, increase of harvest.

போகாநிழலி, *சாயாவிருட்சம்*, a kind of tree which does not cast its shadow.

போகாப்புனல், *ஆவியானவன்னி*, vapour.

போகி, *கார்போகி விதை*, seeds of a plant — Psoralea corylifolia; 2. *பாம்பு*, snake; 3. *பூவரும்பு*, flower bud; 4. இரண்டு தரம் தீர்த்த கவுனக் குளிகை, a mercurial pill animated by a special process of calcination described in the Tamil Medical Science; *5.* பெண் போகத்தில் *அமிழ்ந்தினவன்*, one immersed in sexual intercourse. *6.* போகித்தல், enjoying sexual pleasure; copulating; 7. *கோரக்கர் கையிலுள்ள ஓர் கவுனகுளிகை*, a ball possessed by Korakar a Siddhar which enables him to travel in air.

போகிகாந்தம், *காற்று*, wind.

போகிதேரம், *புளி நறளைக் கிழங்கு*, the root of a creeper — Cissus acida alias Vitis lanata.

போகித்தல், போகிப்பு, *அனுபவித்தல்*, experiencing sexual or animal pleasure; *2. புணர்தல்*, to have coitus.

போகித்தூரிதம், *மணத்தக்காளி*, a plant — Solanum nigrum.

போகில், கொப்பூழ், naval; *2. பறவை*, a bird; *3. பூவரும்பு*, flower bud.

போகிவல்லபம், போகிவல்லியம், *சந்தனம்*, sandal wood.

போகிவாசம், *சந்தனமரம்*, sandal wood tree — Santalum album.

போக்கணந்தூக்கியிலை.

போக்காடு, போக்கு, இறப்பு, death.

போக்கிவிடல், குணப்படுத்தல், as in *நோய்*, curing the disease.

போக்கிற் கொள்ளுதல், *பத்தியமில்லாமல் மருந்துண்ணல்*, taking medicine in the usual course without observing dietic restrictions.

போக்குக்கஞ்சி, see *உரிமைக்கஞ்சி*.

போக்குநீர், *நீர் ஒழுக்கு நோய்*, passing of more urine — diabetes insipidus.

போக்கு முலைச்சி, *சிவகரந்தை*, ceylon loolsy — Sphoeranthus zeylanica.

போக்குலவணம், திலாலவணம், a kind of salt.

போக்கொன்றை,

போங்கம், *மஞ்சாடிப்பூ*, flower of the tree *மஞ்சாடி*.

போங்காலம், இறக்குங்காலம், time of death.

போசகம், *எட்டி*, a tree nuxvomica — Strychows nuxvomica.

போசகி, *அகத்தி*, a tree — Sesbania grandiflora alias coronilla grandiflora.

போசம், *அகத்தி*, see போசகி.

போசரோகணி, கடுகுரோகிணி, root of a plant — Helleborus niger.

போசரோணி, see பெரு விடுகொள்.

போசனகஸ்தூரி, *நாரத்*
கச்சல், fruit of a var
tree.

போசனகுடாரி, *சீரகம்*,
of the plant — Cumin

போசனக்குழல், *உணவ*
alimentary canal.

போசனக்குறடா, *மிளகா*
of a plant — Capsi
2. ஊறுகாய், fruit su
mango, etc preserved

போசனசஞ்சீவி, *எட்*
குன்மத்திற்குக் கொ
மருந்து, a medicine
the eight kinds of gu

போசனத்துக்கான, *உண*
esculent.

போசனப்பதார்த்தம்,
eatables.

போசனப்பரிகாரம்,
போசனப்பிரியம், gas

போசனப்பிரியன்,
கொள்வோன்; வயி
glutton - epicure.

போசனப்பெருக்கம்,
விருத்தியினால்
சாப்பிடல், eating m
excessive hunger.

போசனம், உணவு, food,
eating; *3. அறிவு*, kno

போசனாசயம், இரைப்பை

போசனாந்தம் *சாப்பிட்*
உண்டபிறகு, at the e

போசி, *அரக்காம்பல்*, a
lily.

போசிதான் மிசிரி *(யுனா)* இதை சர்க்கரை பொங்கலோடு சேர்த்து கிண்டிச் சாப்பிட இளைத்த தேகம் பருக்கும். அன்றியும் தாது புஷ்டி, நரம்புக்குப்பலம் உண்டாம். கில்வாதம் இசிவு மகோதரம்போம்; இது ஓர் விதை a seed used by Unani doctors.

போஜிதான்மிசரி, see போசிதான் மிசரி.

போச்சியம், தின்பண்டம், eatables.

போஸ்தக்காய், fruit of poppy plant the seeds of which is called கசகசா. If wounded it yields opium *(அபினி)* a milk which becomes black when dried.

போஸ்தக்காய்ச் செடி, poppy plant — garden poppy — Paver somniferum.

போஷகதாது, திரிதாது, three dhathus — three humours.

போஷணக் கோளாறு உணவு வகையிலேற்பட்ட குழப்பம், derangement of the nutrition — Trophopathy.

போஷண, பலத்தைக் கொடுக்கிற, nutritious.

போஷணசாலை, குழந்தைகளைப் பால் கொடுத்து வளர்க்குமிடம், nursing home.

போஷணத்தந்துகி, lacteal, the primary lymphatic vessel that remains in the centre of intestinal villies is known as lacteal.

போஷணநாடி, arteries contributing to the assimilation of food — Nutrient arteries.

போஷணரோகம், any disease or disorder to nutritional causes — Trophonosis.

போஷணம், உடம்பை வளர்த்துப் பலத்தைக் கொடுக்குந் தொழில், nutriment — Nutrition; 2. கொழுப்பிக்குமுணவு, nourishing food — Nourishment.

போஷிக்கத்தக்க, பலத்தைக் கொடுக்கும், Nutritions.

போஷிக்குமுணவு, Nourishing food.

போடகசுரம், பயறுபிரமாணம் சிறு கொப்புளங்கள் உடம்பு முழுவதிலும் காணும் ஓர் வகைச் சுரம், see அம்மைசுரம், fever due the rising of blebs on the body.

போடக நாறி, see போதக நாறி.

போடகம், கொப்புளிப்பான்; chicken pox; 2. ஓர் அம்மை, a variety of small pox; 3. கொப்பளம், bleb; boil.

போடசெமிக்கி, வயிறு, b).

போடம், vesicle or bleb, pustule.

போடி, சம்பு நாவல் மரம், jambo tree — Eugenia jambolana.

போடிவ பட்டாணி, ஓர் வகை பட்டாணி, a kind of pea.

போடு, orabanche cernus.

போட்களம், போட்டா, பொடுதலை, a prostate plant — Lippia nodifolia alias Verbena nodifolia.

போடோபில்லி, ஓர் சீன தேசச் செடி, a Chinese plant.

போணம், சோறு, Cooked rice.

போதகம், காஞ்சிரை, nuxvomica tree — strychinos nuxvomica; 2. இளமை, youth; 3. குழந்தைப் பருவம், infancy; 4. புலி, சிங்கம் இவைகளின் குட்டி, the young of tiger, lion etc; 5. யானை, elephant; 6. பசளை, a prostate plant — Pottulaca oleracea; 7. திப்பிலி, long pepper; 8. நாக்கிலுள்ள கபம், See போதக சிலேட்டுமம்; 9. வாலைப்பூநீர், which see.

போதக சிலேட்டுமம், நாவிலிருக்கும் ஓர் வகை நீர்ப்பசை, a variety of Kapham named போதகம், which is said to be at the tongue.

போதக நாறிமரம், கொள்ளிக் கட்டைத் தேக்கு, a tree.

போதகப்புல், a kind of grass.

போதகாசிகம், மட்டிச்சாம்பிராணி, Benzoin.

போதகம், போதகா, பேரண்டம், தலையோடு, cranium.

போதகி, கண்களில் கடுகளவுள்ள கட்டிகள், கபத்தின் மேலீட்டினாலேற்படும், small mustard size blabs in the eye due to excess of phlegm humour; 2. பெண்ணூர்க்குருவி, a female species of sparrow; 3. பசளைக் கொடி, spinach climber — Basella cordifolia; 4. வேங்கை மரம், a tree — Pterocarpus marsupium; 5. சீரகம், cumin seed; 6. ஓர் கண்வியாதி, a kind of eye disease; see போதகிவர்த்தமம்.

போத கிராந்தி, விஷ்ணு கிராந்தி

போதகி வர்த்தமம், கண் இரப்பைகளினுட் பாகத்தில் செந்நிறமான கட்டிகளுண்டாய் இரத்தம் வடிந்து கொண்டு நமையுடன் கூடிய மிக்க வலியையு முண்டாக்குமோர் கண்ணோய். a number of red boils or postules resembling red mustard seeds attended with pain, itching and exudation of blood.

போதக்கியம்,

போதக்கிரியை, சன்னியினால் தானே புலம்பிக் கொண்டே உடுத்திருக்கும் துணியைக் கிழித்தும், உண்ணாமல் மயக்கத்தோடு கிடக்கும் ஓர் செய்கை, a delirious condition marked by crying, fainting, tearing of the cloth worn by him, etc.

போதசு, போதஸ், ஓர் பூடு, an herb.

போதச்சயம், ஓர்வித மயக்கம், அதிசுழுத்தி, a long or prolonged sleep — Coma.

போதத்தம், சிவப்பு மந்தாரை, a tree — Bauhenia variegala.

போதநாசனி, கோவை, a creeper — Bryonia grandis.

போதம், அறிவு, knowledge; 2. ஞானம், wisdom; 3. யானைக்கன்று, young of an elephant.

போதயத்தம், பட்டாணி, pea pulse.

போதயந்தரத்தான், சிறு காடை, a bird; quail.

போதயம், பட்டாணி, pea seed — Pisum sativum.

போதரவிடல், உயிர்த்தல், respiring; breathing.

போதனமரம், காசுக்கட்டி உண்டாகு மரம் — catchu nigrum.

போதனம், புகை காட்டல், funigating exposing, to smoke; 2, அறிவு, knowledge; 3. பாதாள மூலி, a creeper, ஆடுதின்னாப்பாலை, or கோரைக்கிழங்கு or சிறு நெருஞ்சில் or சீந்தில், which see.

போதனாவாக்கி, செம்முள்ளி, a red species of the Indian night shade — Barleria prionitis.

போதனை, see பேதனமரம்.

போதா, a large stork; heron; crane.

போதி, அரச மரம், a tree — Ficus religiosa; 2. மலை, mountain; 3. அறிவு, knowledge.

போதிதரு, **போதிரன்**, see போதி.

போதிமம், அரசு, tree — Ficus religiosa.

போது, காலம், time; season; 2. பூ, flower; 3. பூவரும்பு, flower bud; 4. தாமரை, lotus.

போதுகாலம், பெண்கள் குழந்தை பெறும் பக்குவம், பத்தாமாதம், period of delivery, i.e. tenth month.

போதுமளவு, வேண்டிய மட்டும், a sufficient quantity — Quantum sufficit.

போதுளி, வெண்கடம்பு, or கடப்பமரம், common cadamba tree — Anthocephalus cadamba.

போதை, மயக்கம், alchoholic intoxication. 2. சடைக் கஞ்சா, ganjah — Cannabis sativa.

போதைப்புல், காவட்டம் புல், a kind of grass — Citronella — Andropogon nardus; 2. கர்ப்பூரப்புல், lemon grass from which oil is extracted — Andropogon citratis.

போத்திராயுதம், பன்றி, pig; hog.

போத்திரி, பன்றி, pig; 2. வெள்ளரி, cucumber.

போத்து, செம்போத்துக் குருவி, a bird — Indian cuckoo; 2. மிருகத்தின் ஆண் வகை; the male among animals e.g. எருமைக்கடா; 3. தென்னம்பிள்ளை, young cocoanut plant — Cocoanut seedling; 4. நீர்ச்சாதி, amphibious animal.

போநாந்தை, பனை, palmyra tree — Borassus flabellifer, இளம்பனை, young of palmyra.

போந்தி, பருமை, big; 2. வீக்கம், swelling.

போந்து, பனை, palmyrapalm; 2. இளம்பனை, young of palmyra; 3. வேங்கை மரம், kino tree — Pterocarpus marsupium; 4. பல்லி, lizard.

போந்துகம், பனைமரம், palmyra tree — Borassus flabellifer.

போந்துகாதினை, மஞ்சள் தினை, yellow variety of Itallian millet — Setaria italica.

போந்துகாபீர்க்கு, நுரைபீர்க்கு, loofa — Luffa aegyptiaca.

போந்தை, see போந்து.

போம்பல், நீர்க்கடம்பு, water cadamba or female cadamba — Stephegyne parviflora.

போம்பறி, நிலக்கடம்பு, a tree — Anthocephalus cadamba.

போம்பனி, மருவு, a plant, Maid's love— Artmesia abrotanum.

போராமக்கணம், குழந்தைகளுக்கு காணும் ஓர் நோய், a children's disease.

போர்க்கணம், குழந்தைகளுக்கு வரும் ஒரு நோய், a children's disease.

போத்தேங்காய், வலிய தேங்காய், a variety of cocoanut.

போர்மாந்தம், குழந்தைகளுக்குண்டாகும் எண் வகை மாந்தத்திலொன்று, one of the eight varieties of diseases caused by indigestion in children marked by gurgling noice in the abdomen; 2. குழந்தைகளுக்கு மயக்கமுண்டாகி, பாலுண்ணாமல் உடம்பிளைக்கும் ஓர்வகை மாந்தநோய், a kind of indigestion in children attended with giddiness. shaking of head, palpitation of heart sunken eyes etc.

போர்வை, தோல், skin.

போலம், நிலக்கடம்பு, see போம்பறி.

போலவங்கம், பவளம், coral; 2. கள், toddy.

போலி, ஒட்டகம், camel.

போலிச்சரக்கு, a false drug which resembles the real one.

போலிச்சூதகம், பொய்த்திட்டு, மாதவிடாய்க் குண்டான குணங்களெல்லாம் இருந்தும் இரத்தம் மாத்திரம் வராதிருத்தல், a condition in which the bodily symptoms of mensturation occur without any blood - Xeromenia.

போலிச் சூல், பொய்க்கருப்பம், false pregnancy pseudo pregnancy — Pseudo cyesis.

போலிப்பிரமேகம், சனன உறுப்புகளில் அழுக்கு முதலிய மாசுகள், சேர்ந்திருக்குங் காரணத்தினால் வீக்கங் கண்டுண்டாகும் மேக நீரொழுக்கு, a disease caused by accumulation of dirt in the genitals but has the same symptoms as venereal disease.

போலிமருந்து, imitation medicine — False medicine which resembles the real medicine.

போலி முள்ளந்தண்டு, பீடிகை யெலும்பு — Sacrum. It is called false vertebral because the composed bone closely resembles the vertebral of the skin.

போலிவிப்புருதிக் கட்டி, swelling ; resembling an abscess.

போலிவைத்தியம், charlatanism — Quackery.

போல், மூங்கில், bamboo.

போவகரியெலை, புங்கங்கொட்டை, soap nut.

போழ்தல், பிளத்தல், splitting; 2. வெடித்தல், gaping.

போழ்து, see போது.

போழ்துக்கு முன் பிடிக்கில் தும்பி, நாக சிங்கி, a medicinal plant which see.

போழ்முகம், பன்றி, hog.

போளம், நிலக்கடம்பு, see குயக்காலம் — Anthocephalus cadamba; 2. கரியபோளம், which see; 3. வெள்ளை போளம், which see.

போளாங்கல், gravel stone.

போறை, கோரை, a kind of grass.

போற்குன்றி, வரிக்குண்டுமணி, jewellers' beed.

போற்றணி, நிலப்பூசினி, a creeper — Ipomea digitata.

போற்றிரசமூலி, மருளூமத்தை, which see.

போனகம், சோறு, cooked rice.

போனகற்பி, கொக்கிறகு, feather of stork.

போனாற்தேடி வழிமறித்தான்.

பௌ

பௌண்டிரவம், பாஞ்சாலிக் கொடி.

பௌதிக, பூமிக்குரிய, physical; 2. பூதசம் பந்தமான, relating to elements; 3. இரசாயன, chemical.

பௌதிகக் கவர்ச்சி, இரசாயனக் கவர்ச்சி, chemical attraction of atoms of the element of others resulting in chemical compound.

பௌதிகக் கிரணம், Chemical ray.

பௌதிகக் கூட்டு, Chemical composition.

பௌதிகக் கூட்டுப்பாடு, Chemical composition.

பௌதிகக் கூறுபாடு, Chemical analysis.

பௌதிக சந்தி, Chemical union.

பௌதிக சரக்கு, குக்கில் முதலியன, chemical drug as bdellium.

பௌதிக சரீரம், பூதவுடம்பு, physical body; 2. ஐம்பூதத்திற்குரிய வுடம்பு, body consisting of elements.

பௌதிக சாஸ்திரம், ஓர் ஆயுள்வேத நூல், an Ayurvedic science book — Physics.

பௌதிக ஞானம், ஐம்பூத சம்பந்தமான வுடம்பிற்குரிய ஞானம், wisdom of man in his physical body; 2. புத்தமதத்திற் கூறிய ஞானம், the eminence of wisdom related to Buddhistic philosophy.

பௌதிக பரீட்சைசாலை, இரசாயன விஷயங்களை ஆராய்ச்சி செய்யுமிடம், chemical laboratory.

பௌதிக புலன், பூதசம்பந்தமான ஐம்புலனிலொன்று, one of the five physical senses.

பௌதிக பிரிவினை, இரசாயன விதிப்படி ஒரு வஸ்துவினின்று பிரிதல், Chemical decomposition.

பௌதிக மங்கை, பொன்னாங்கண்ணி, sessile plant — Illecebrum sessile alias Alternanthera sessile.

பௌதிகம், பூதசம்பந்தம், relating to five elements; 2. புத்தசம்பந்தம், Buddhistic.

பௌதிக ரசாயனம், பூதசம்பந்தமான இரசாயனம், Physico chemical.

பௌதிக லோகம், பஞ்ச பூதத்தால் அமைந்த வுலகம், world founded on five elements — Physical world.

பௌதிக வாதம், இரசாயன நூல், chemistry.

பௌதிகவாதி, இரசாயன சாஸ்திரி, chemist.

பௌதீகம், கருநெல்லி, which see.

பௌத்தர தாமரை, குளிர்தாமரை, lotus.

பௌத்திரத்தினை, மஞ்சள் தினை, yellow Itallian millet.

பௌத்திரநெல்லி, அரிநெல்லி.

பௌத்திரப்புல், தருப்பைப் புல், sacrificial or sacred grass.

பௌத்திரம், see பௌத்திரரோகம்; மூலத்தில் வாயுகண்டு மேகநீர் சனித்து புரையோடி சீழ் பாய்ச்சல் கண்டு முளைவிழும் ஓர் நோய் fistula in ano due to other causes than venereal.

பௌத்திர ரோகம், போகத்தினால் கனல் மிஞ்சி மேகமுண்டாகி பீசத்திற்கும் அபானத்திற்கும் இடையில் கொடியின் அடிநரம்பின் மேலாவது அதன் இருபக்கத்திலாவது அண்டம், அபானவாயு ஆகிய இவைகளிலாவது , நமைச்சலெடுத்து வீங்கி நொந்து கொப்புளித்து சீழும் சலமும் வடிந்து பிறகு புரையோடி நரம்பழுகி, கண்கள் உண்டாகி அதன் வழியே மூத்திரமும் மலமும் இறங்கி அதனால் உடம்பு மெலிந்து சாப்பாடு செல்லாது ஆயாசத்தையும் களைப்பையுமுண்டாக்கும் ஓர் வகை நோய், a deep narrow sinuous ulcer extending between the surface of the body and internal an cavity near the anus said to have been caused by accumulation of venereal secreations due to excess of heat caused by sexual intercourse — Fistula in ano caused by venereal disease.

பௌத்திர விரல், மோதிர விரல், ring finger.

பௌத்திரபோளம், See கரியபோளம்.

பௌத்திர முருங்கை, புனல் முருங்கை, which see.

பௌத்திராயம், see செந்திராய்.

பௌத்திராவம், ஊதளை, physic nut plant — Jatropha glandulifera.

பௌத்துவம், மரகதம், a precious gem; emrald.

பௌந்திரம், See பௌத்திரம்.

பௌமம், பூமி சம்பந்தம், relating to earth; physical; 2. நிலத்திற் பிறப்பன, physical bodies.

பௌரகம், நொச்சி, a garden plant — Vitex negundo.

பௌரிக்காய், சவுரிக்காய், fruit of climber — Trichosanthes palmata.

பௌருசத்துவம், ஆண்தன்மை, manly power — Potency.

பௌருசம், புருடித்தன்மை, manliness.

பௌரைக்கல், கற்சிட்டம், over burnt brick.

பௌலுருவி, புல்லுருவி, parasitic plant.

பௌவம், கடல், sea; ocean; 2. உப்பு, salt; 3. நுரை, forth; 4. நீர்குமிழ், water bubble.

மகதம், see மகிழம்.

மகதுருமம், அரசு, a tree — Ficus religiosa.

மகபொட்டி, குதிரைப்பல் மெழுகாகும், a drug which is said to turn the tooth of the horse into a wax.

மகர சால், மாமரம், mango tree.

மகர சிதம், கொன்னை, a tree — Cassia rhombifolia alias C. fistula.

மகரசியா, செழுமலர்க் கொன்றை, large flower cassia — Cassia florida.

மகரதம், கொடிவேலி, a plant, plumbago — Plumbago zeylanica.

மகரத்துவஜம், ஒரு மருந்து, a medicine. It is considered as one of the brightesdt jewel of the Ayurveda, the most glorious achievement of ancient Rishis. It is obtained by taking 8 tolas of thin gold leaf, 64 tolas of mercury and 128 tolas of sulphur and making an amalgam. This is put in a narrow necked glass bottle and placed in an even position in a sand bath and heated for 3 days with strong fire. After cooling collect the medicine gathered round the neck of the bottle.

மகரந்தத்தாள், மகரந்தப் பையையுடைய பூங்காம்பு, stamen filament.

மகரந்தப்பு, வெந்தயம், fenugreek — Trigonella foenumgraecum.

மகரந்தப்பை, மகரந்தப் பொடியையுடைய பை, anther.

மகரந்தப்பொடி, பூந்தூள் அல்லது பூந்தாது, pollen grain; 2. பூவின் நடுக்காம்புகளின் நுனியில் இருக்கும் பையிலடங்கிய பொடி, pollen grain found in the anthers.

மகரந்தம், கள், toddy; 2. குயில், a bird — Indian cuckoo; 3. பூந்தேன், honey of flowers; 4. பூந்தாது, pollen of flowers; 5. தேமா, a sweet mango tree.

மகரந்தம், கஸ்தூரி மல்லி, musk jasmine — Jasminum pubescens.

மகரந்தவதி, பாதிரிப்பூ, flower of Stereospermum suoveolens.

மகரந்தவர்க்கம், (Bot) stamen.

மகரந்தாட்டகாசம், முல்லைக்கொடி a variety of jasmine creeper — Jasminum angustifolia.

மகரந்திக, தேமாமரம், sweet mango tree.

மகரந்தௌகம், பூ, flower.

மகரப்பூ, see மகரந்தப்பூ, 2. வழலை, which see. மராட்டிப்பூ, which see.

மகர மச்சம், மகர மீன், a fish, shark.

மகரம், பூந்தாது, pollen of flowers, 2.சுறாமீன்; shark fish; முதலை, crocodile.

மகரம், (in Astrology) capricarnus — Sword fish. 2. பன்றி மீன், dolphin.

மகர வாழை, காட்டுமல்லிகை, wild jasmine; 2. மருகு, Origanum marjorana; 3. ஒரு வகை வாழை, a kind of plantain.

மகர விருத்தி, சேம்பு, tuber — colocasia — Colocasia antiquorum.

மகரவிரி, சேம்பு, see மகர விருத்தி.

மகரவேதிகம், வாலுளுவை, intellect tree — celastrus paniculata.

மகராகரம், மகராங்கம், கடல், see ocean.

மகராசபூபதி, மூலாதாரம், one of the six centres in the human system situated in the region of anus.

மகராசமூலி, மண்ணீரல், spleen.

மகராலயமருதம், see மகராலயம்.

மகராலயம், உப்பு, common salt, f 2. கடல், sea; ocean.

மகரி, கடல், sea; ocean.

மகரிப்பு, கையாந்தகரை, a plant — Eclipta albo or E. prostata.

மகருதம், கொடிவேலி, a plant plumbago — Plumbago zeylanica.

மகவாட்டி, குழந்தைப் பிள்ளைக்காரி, a woman having child in arms.

மகவாதரோகம், complicated rheumatic diseases.

மகவு, பிள்ளை, child.

மகளிக்கீரை, ஓர் கீரை, a kind of greens.

மகளிரான் மலர்மரம், பத்துவித பூச்செடிகள்; (தொகையகராதி) மகிழ், முல்லை, ஏழிலை, சண்பகம், குரா, அசோகு, பாதிரி, புன்னை, குருக்கத்தி, மரா, முதலியன, a group of ten flowering trees or plants.

மகளீது, see மகிழம்பூ.

மகளோது, நரிப்பாலை, which see.

மகனாலிமூலி, சிறுமுன்னை வேர்,

மகன்றில், ஓர் பறவை, a bird.

மகா, அளவற்ற, immense; உன்னத, superior; 3. மேன்மையான, great; 4. மிகுந்த, intense; 5. பெரிய, great; 6. உயர்ந்த, high.

மகாஅகதம், the name of an antitoxic preparation.

மகா அவிழ்தம், சுக்கு, dried ginger.

மகாஅவுஷதநாசனி, பூசினிக்காய், pumpkin — Cucurbita pepo.

மகாகச்சம், சமுத்திரம், ocean; 2. மலை, mountain.

மகாகணம், குழந்தைகட்கு நாக்கு, உதடு புண்ணாகி, கண் வெளுத்து, உடல் வெதும்பிக் காணும், ஓர் வகைக் கணை, a congenital disease of the children marked by anaemia. ulcerated tongue and lips.

மகாகண்டம், பெரிய முள்ளங்கி, large raddish — Raphanus sativus.

மகாகண்ணி, இந்திர பாஷாணம், a variety of arsenic.

மகாகதம், காய்ச்சல், fever, 2. மிகுந்த வெப்பம், intense heat; 3. மிகுந்த கோபம், great anger.

மகாகந்தம், வெங்காயம் அல்லது உள்ளி, onion — Allium cepa; 2. அரிசந்தனம், red sandal — Pterocarpus santalinus.

மகா கரண சரீரநாசம், Spiritual phenomena.

மகாகல்யாணகம், ஓர் வகை கிருதம், a medicinal ghee in Ayurveda for insanity and for strenthening memory and under standing.

மகா கற்பம், சிறந்த கற்பமூலிகை, a superior drug to prolong life; drug of all healing potency; 2. சித்தர்கள் உபயோகிக்கும் ஓர் சிறந்த மருந்து, a superior medicinal preparation used by Siddhars to secure immortal youth.

மகா பித்தம், வில்வமரம், bael tree — Aegle marmelos alias Crataeva marmelos.

மகா காசம், ஓர்வகைக் காசநோய், a kind of virulent asthma or bronchitis; 2. பரவெளி, atmosphere or ether.

மகாகாமி, மிக்ககாமங் கொண்டவன், a lascivious person; 2. முத்திருக்கஞ் செவி, a plant, which see.

மகாகாயம், பெரிய உருவம் அல்லது யானை, elephant; 2. பருத்தவுடம்பு, a stout body.

மகா காலங்கம், ஆதண்டை, a thorny shrub — Capparis horrida.

மகா காலம், நெடுங்காலம், a long time; 2. மாமரம், mango tree; 3. குறட்டை, Korattay — trichosanthes salmata.

மகா காளி, ஆட்டுச்செவி அல்லது ஆடு தீண்டாப்பாலை, a bitter prostate plant — Aristocochia bractata.

மகா கிராவணி, (real variety) — Hydrocotyle asiatica.

மகா கிரீவம், ஒட்டை, Camel; 2. நீண்ட கழுத்து, long neck.

மகா கிருதம், clarified butter other than. 2. கும்பக்கிருதம், fresh clarified butter.

மகாகுட்டம், பெருவியாதி, leprosy. In this type of leprosy the skin contracts and with the bursting of the skin a piercing pain is felt in the affeted parts. It loses all sensibility to the touch or heat and is accompanied by a general sense of lassitude in the limbs.

மகா குணபாடம், தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a Tamil Medical Science — (Materia medica) by Theraiyer.

மகா குண்டலினி, the cosmic energy.

மகா குமரி, குங்குமச் செவ்வந்தி, a big variety of red Chamomile — Chrysanthemum indicum (red).

மகா கும்பாவம், குமிள் அல்லது குமிழ், Kashmere tree — Gmelina arborea; 2. மேகாதிவாதம், கபம், கிரகணி, பாண்டு, இவைகளை நீக்கும் ஓர் மூலிகை. it is useful for anaemia, diarrhoea (chronic) rheumatism etc.

மகா கும்பி, பெரும் பூசினி, a larger variety of pumpkin — Cucurbita pepo (large).

மகா குழம்பு, அகஸ்தியர் பெருங்குழம்பு, a wax like medicine.

மகா கெந்தா, கறுப்புக்கடலை, a black pulse — Bengal gram.

மகா கெந்தம், சிதேவி செங்கழுநீர், which see.

மகாகோடா சுழிமாத்திரை, தாளகம், வீரம், கௌவுரி, லிங்கம், பாஷாணம், சூதம், கெந்தி, துரிசி, வெண்காரம், அன்னபேதி, பால்துத்தம், மனோசிலை, செப்புத் தொட்டி, படிகாரம், வாளம், இவைகளைச் சுத்தி செய்து கடைச் சரக்குகளுடன் சேர்த்துத் தயாரித்து சித்தநூலிற் கண்ட அனுபானப்படி கொடுக்கும் மாத்திரை. இதனால் மாலைக்கண் காமாலை, சோகை, விஷதோஷம், விப்புருதி, பீலிகை, காசம், கிரந்தி முதலியவைகள் தீரும். a pill containing the above drugs which is used for jaundice, dropsy, bronchitis diseases of spleen, night blindness etc.

மகா கோளி, unidentified plant.

மகா கோஷா, கற்கடகசிங்கி, மாமர குடும்பத்தைச் சேர்ந்த பிஸ்டேசியா இண்டகிரிமா மரத்தில் தோன்றும் கொம்பு போன்ற புது வளர்ச்சியாம் a growth like the claws of crab seen on the leaves & petioles of Pistacia integerrima; galls of Pistacia integerrima.

மகாக்கினி, காடாக்கினி, great fire which see. தீபாக்கினி, moderate fire spreading flames.

மகாங்கம், ஒட்டை, camel.

மகாசகா, மகாசகை வாடாத பூவுள்ள மறுதோன்றி மரம், a tree yielding unfading flowers — Gomphroena globosa; 2. வாடா மல்லிகை, a kind unfading flower.

மகாசங்கம், எலும்பு, bone; 2. நெற்றி, fore head.

மகாசத்தி, சத்தி, the great universal power the female energy of deity.

மகாசம்பு, பெருநாவல், a tree yielding a large variety of jambo fruits — eugenia jamboo.

மகாசயம், கொடிய சயநோய், advanced consumption; 2. சமுத்திரம், ocean.

மகாசனி, வாலுளுவையரிசி, seed of intellect tree — Celastrus paniculata.

மகாசாயம், ஆலமரம், banyan tree — Ficus bengalensis.

மகாசாரக்கந்தம், பேரீச்சு, date wild variety — Phoenix acaulis.

மகாசாரம், சிறு விடுகொள். which see.

மகாசாலி, பெரும் பீர்க்கு, big variety of ridge gourd; 2. சிவப்பு நெல், red paddy; 3. வெள்ளையரிசி, white rice; 4. கோதுமை, wheat.

மகாசாலினி, தின்பீர்க்கு, a climber — Luffa acutangula.

மகா சிங்கிச் சுண்ணம், துருசுச் சுண்ணம், calcined white powder of copper sulphate — blue vitriol.

மகாசித்திரசாயனம், தாளிப்பனை, talipot palm.

மகாசித்தாடன்,

மகாசிந்தாதி லேகியம், தீராத பாண்டு காமாலை, சோகை, ஆகிய இவைகளுக்குக் கொடுக்கும் ஓர் வகை லேகியம். இதன் செய்முறை அகத்தியர் வல்லாதி — 600 ல் பார்க்கவும், an electuary preparation as in Agastian Vallathi 600. It is useful in jaundice, dropsy, anaemia etc.

மகாசிராவி, கோவை, a climbing plant.

மகாசிரோட்டம், கிரகணி, Chronic diarrhoea.

மகாசுகந்தரசம், see இருசுவசற்பாட்சி.

மகாசுக்கம், see மகாகசா.

மகாசுராங்கிசக் குளிகை, ரசம், கெந்தி, ஊமத்தம் விதை, திரிகடுகு சமன் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றினால் அரைத்துருட்டிய

மாத்திரை, தினசுரம், இருமுறை சுரம். மும்முறைச் சுரம் நால்முறை சுரம் மற்றும் சுர வகை எல்லாம் போம், a mediated pill prepared with mercury, sulphur ect., for fevers — intermittent fevers.

மகாசுவாசம், கண்டத்தில் கலகல வென்ற சத்தத்துடன் விடும் பெரும் மூச்சு, a disease in which the patient breaths heaily lying unconcious, and a low rattling sound in the throat, eyes fixed in gaze and with cramps at his sides.

மகாசுவேதம், சிறு வாலுளுவை, intellect plant — Celastrus paniculata.

மகாசூலை, rheumatism.

மகாதசம், மாவிலிங்கம், a tree — Crataeva religiosa.

மகாதந்தம், யானைக்கொம்பு, tusk of an elephant.

மகாதமனி, இருதயத்தின் இடது பக்கத்தினின்று கிளம்பும் ஓர் பெரிய செவ்விரத்தக்குழல், a large artery starting from the left ventricle of the heart — Aorta.

மகாதலம், அரிதாரம், yellow orpiment.

மகாதனம், பொன், gold.

மகாதாது, see மகா தனம்.

மகாதானம், பெருங்கொட்டை, a big seed.

மகாதி, திப்பிலி, long pepper plant — Piper longum.

மகாதிக்தம், ஓர் கிருதம், a bitter medicated ghee given for skin diseases. It is a Ayurvedic preparation.

மகாதிம்பம், பெருமரம், a tree which see.

மகாதிரகிருதம், a medicinal ghee used for all kinds of leprosy.

மகாதிராவகம், ஆ.வே முறைப்படி சித்திர மூலவேர், நாயுருவி, புளியம்பட்டை, இலைக்கள்ளி, பிரம்பு, மூக்கிரட்டை, முதலியவைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி மற்ற கடைச் சரக்குகளுடன் சேர்த்து வாலையிலிட்டு வடிக்கும் திராவகம், an Ayurvedic preparation obtained by distilling the ashes of some plants along with some bazaar drugs.

மகாதிலதம், சாரிபாதி, which see.

மகாதிவ்விய மெழுகு, a wax like medicinal preparation.

மகாதுருமம், அரசு, a tree — Ficus religiosa.

மகாதேவி, the Great Mother.

மகாதேஜம், பாதரசம், mercury or quick silver.

மகாதோஷக்குறி, உந்தியில் ஒரு விரல் பொருந்தும் அளவு எக்கி உயர எழும்பில் இத்தோஷமாம்; a symptom or morid condition — தோஷம்.

மகாதோஷ நீக்கி, சித்தா மல்லி, see சிற்றாமல்லி; 2. பாவட்டை; a small tree — Pavata indica.

மகாத்திரம், தேக்கு, teak Tectona grandis.

மகாத்துருவம், வெண்கடம்பு, white cadamba — Anthrocephalus cadamba.

மகாநங்கை, மிளகாய் நங்கை, which see.

மகாநந்தை, கள், toddy.

மகாநாகம், சுரபுன்னை மரம். a tree which see; 2. பெரும் பாம்பு, a big snake.

மகாநாதம், சங்கு, conch; 2. பொன், gold; 3. பொன்னிமிளை, a kind of yellow bismuth.

மகாநாரி, சுரபுன்னை, see மகாநாகம்.

மகாநிசி, நடு இரவு mid night.

மகாநித்திரை, மரணம், eternal sleep - death.

மகாநிம்பம், மகாநிம்பர், பூவரசு மரம், Portia tree - Thespesia populnea; 2. பெருவேம்பு, big species of neem tree; 3. 100 வருஷத்திய வேப்ப மரம் a margosa tree of 100 years old - Melia indica alias Azadirachta indica; 4. சர்க்கரை வேம்பு, neem whose bark is sweet to taste.

மகாநிர்குண்டி தைலம், கண்ணோய் - சிரா பீனிசம் இவைகளுக்குத் தலை முழுகும் தைலம் a bathing oil prepared out of நொச்சி - Vitex negundo.

மகாநீலம், கையாந்தகரை a plant - Eclipta prostata; 2. மரகதம், a precious gem - emerald.

மகாநேமி, காகம் crow.

மகாந்தம், மகரந்தம் pollen.

மகாபஞ்சகாவிய கிருதம், a medicated ghee used for epilepsy, insanity dropsy,abdominal tumour, piles, chlorosis and jaundice.

மகாபட்சி, ஆந்தை owl.

மகா பஞ்சமூலம், ஐந்து வகையான மரத்தின் வேர்ப் பட்டைகள் சேர்ந்த கூட்டு (வில்வம், முன்னை, ஈசுர மூலி, பாதிரி, பெருமரம்) the roots of the five trees or plants which see.

மகாபதுமம், வெண்டாமரை white lotus flower.

மகாபதுமவிசர்ப்பி, பாலர்களுக்குத் தலையிலும் கீழ் வயிற்றிலுமுண்டாகி மரணத்தை யுண்டாக்கும்; இது முதலில் நரம்பின் வழியாக நெற்றியில் கண்டு பிறகு மார்பிலிறங்கி கடைசியாகக் குதத்திலிறங்கும். see பாலவிசர்ப்பி, a kind of scabis.

மகாபத்திரம், வில்வ இலை leaf of bael tree, see விளாம்பத்திரி; 2. see லோத்திரம், 3. தேக்கு, teak; 4. பனை மரம் palmyra palm.

மகாபத்திர, பூசபத்திரி, a plant which see.

மகாபத்திரி, சிவப்பாமணக்கு, red castor plant.

மகாபலம், மயிர் மாணிக்கம் which see.

மகாபலம், கொழிஞ்சி orange tree - Citrus aurantifolia; 2. பேராமுட்டி - Pavonia odorata; 3. தென்னை cocoanut tree; 4. கொம்மட்டி மாதுளை a kind of citron; 5. தூதுவளை, a thorny shrub - Solanum trilobatum 6. கொழுமிச்சை, ஓர் வகை நார்மரம்; இதன் பட்டியினின்று சணலைப் போன்ற நார் எடுக்கப்படும். flax tree - Sida rhomboides the bark yields a flax like fibre.

மகாபலன், வலிமையுள்ளவன் a strong person; 2. காற்று wind/

மகாபலா, பேராமுட்டி a plant - Pavonia odorata; 2. வரித்தும்மட்டி a creeper - Citrullus colocynthis; 3. பேய்க்களா, which see.

மகாபலிகம், வெள்ளைப் பூசினி, ash gourd - Benincasa cerifera

மகாபலை, வில்வம் a tree - Crataeva marmelos.

மகாபாரிச வாதம், கையுங் காலும் ஒரு பக்கங்கனத்து, திமிர்த்து, உடல் விழ்ந்து, நாவு தடுமாறிப் பிழைக்கும் வழியில்லாத தீராத சன்னியை யுண்டாக்குமோர் வாதம் (யூகி 1200) para plegia.

மகாபாபத்தழகி, சிவகமூலி which see.

மகாபிராணம், காகம் crow.

மகாபுடம், இரண்டு கசம் அகலம், நீளம், ஆழமுள்ள சதுரப் பள்ளத்தில் அல்லது குழியில் 1000, விரட்டியில் போடும் மருந்துப் புடம் a process of calcining medicines in a pit measuring 2yds x 2yds x 2yds or 2 cubic yeards with 1000, cowdung cakes. The luted crucible with medicine is placed in the centre of the pile or above 750 cakes and set fire with camphor when all the cakes are completly burnt into ashes and cooled the crucible is taken out and opened.

NOTE:- ஆயுள் வேதப்படி 2 முழம் சதுர மாயும், 2 முழம் ஆழமாயும் பள்ளம் தோண்டி அதில் பாதி வரை காட்டுமுட்டைகளை நிரப்பி அதன் மத்தியில் மருந்து பாண்டத்தை வைத்து மேலும் காட்டு முட்டையை நிரப்பித் தீமூட்டிப் போடும் புடம்.

மகாபுருஷம் see மேதை.

மகாபூ, பெருஞ்சீரகம் அல்லது சோம்பு, anise - Aniseed - Anethum foeniculum.

மகாபூசிதம், பெருஞ்சீரகம், see மகாபூ.

மகாபூசுரபி, புன்னை, a tree - Alexandria laurel - Celophyllum apetalum.

மகாபூதம், பஞ்சபூதம், five elements - gross elements as opposed to subtle elements.

மகாபூதம், gross element.

மகாகபெலம், கொம்பட்டி, a creeping plant - water melon - Bryonia callosa or Citrullus vulgaris.

மகாபெலா, see மகாபலா.

மகாபேகன், தவளை frog.

மகாபைசாசிகம், ஓர் கிருதம். இது பைத்தியத்திற்குதவும். a medicated ghee for insanity.

மகாபிரளயம் dissolution of universe; deluge.

மகாப்பிராசத்தி, ஓர் வகை அப்பிரகம், a kind of mica.

மகாப்பிரியபான்னி, சிறுவிடு கொள் which see.

மகாமகரப்பூ, வழலை, which see.

மகாமக விருட்சம், கற்பக மரம், a celestial tree which gives whatever is wished for.

மகாமண்டூரம், a calcined red powder prepared from iron gross.

மகாமதம், வெறி, intoxication - madness.

மகாமரு, கருப்பு வாகை black species of வாகை, which see.

மகாமால், வில்வயிலை, leaf of bael tree. see மகாபத்திரம்.

மகாமாயை see மாயை.

மகாமுகம், முதலை, crocodile.

மகாமுடி, யோனி, பெண்குறி a female genital.

மகாமுனி, அகத்திய முனி the great sage Agastya; 2. தும்புரு, which see.

மகாமூர்க்கம், நாரத்தை bitter orange tree - a variety of citrus.

மகாமூலி,
மகாமூலிகை, ஆகாச கருடன் கிழங்கு, sky root - Climbing shrub - Bryonia epigaea; 2. கற்பகத்துக்கு உதவும் சட்டமுனிவாத நூல் 1000த்தில் சொல்லியுள்ள 23 சிறந்த மூலிகைகள், the 23 superior drugs related in the Tamil alchemical science 1000 of the Siddhar named Satta Muni - All healing drugs of high potency. They are the drugs which secure for the user a mastery over the body. They are the lords of all the medicinal herbs and the followed by the rejuvenation of the system and enable the user to live for hundreds of years on the earth in the full enjoyment of a new body. The regime of diet and conduct is the came as for the Soma plant.

Compare this with ambrosia which is known in Ayurveda by the epithet of Soma, used for the prevention of death and decay of the body. The soma plant is classified into 24 species according to the difference of their habitats, structures epithets and potencies. Although it is mentioned in Rig Veda, it is now a days not within our reach.

மகாமூஷிகம், பெருச்சாளி bandicoot.

மகாமேகரோகம், பிரமேகம் which see.

மகாமேதை, மருளுமத்தை which see.

மகாமேதைகண்டியல், வெள்ளை, white.

மகாமேதோ see மகா மேதை.

மகாயோனி, வாயுவானது யோனி கருப்பம் இவ்விடங்களில் புகும்போது அல்குலில் சதை வளர்ந்து விலாசமாக பருக்கும் ஓர் வகையான பெண்களுக்குண்டாகும் நோய். a disease of the vagina wherein it is extremely dilated.

மகாரச சூதம், ஓர் மாமரம் a kind of mango tree.

மகாரசதம், பொன் gold.

மகாரசம், ஓர் மரம், a tree; 2. கஞ்சி rice water; 3. காடி, any fermented liquid.

மகாரசனம், see மகாரசதம்.

மகாரசிங்கி, நாதம் ovum.

மகாரசிதகாரம், மிளகு, pepper - Pipe nigrum.

மகாரசிதம், மாமரம், mango tree.

மகாரம், கல்லுப்பு, rock salt; 2 மகாரவெழுத்து the mystic letter 'ம

மகாரவி, கறுப்பரிசி, black rice.

மகாரவுப்பு, கல்லுப்பு, rock salt.

மகாராத்திரம், நடுராத்திரி midnight.

மகாராச மிருகாங்கம், க்ஷயம், காசம், பாண்டு முதலிய நோய்களைப் போக்கும் ஓர் ஆயுள் வேத மாத்திரை an Ayurvedic medicine used for consumption, bronchitis, anaemia etc.

மகாராசயோகி, பச்சைக் கற்பூரம் crude comphor.

மகாரிட்டம், மலைவேம்பு mountain neem - Melia azedirachta.

மகாரேவதம், முட்பலாசு, which see.

மகாரோகம், குட்டம் முதலான பெரு வியாதி, big diseases like leprosy etc.

மகாலிங்கம் a tree - Weaver bean - Schrebera savietenoides.

மகாலோகம், காகம் crow.

மகாவக்கினி,
மகாவன்னி, see கமலாக்கினி.

மகாவசந்தகுசுகமாகதம், உதர நோய், உன்மாதம், பாண்டு, விஷபேதி, குன்மம், வீக்கம், க்ஷயம், சுவாச காசம், மேக நீர்ப்பேதி, குறை நோய், மார்பு வலி இவைகளைப் போக்கக் கூடிய ஓர் ஆயுள்வேத மாத்திரை. an Ayurvedic pill capable of curing some complicated diseases as stomach complaints, lunacy, dropsy, cholera, dyspepsia swelling consumption, asthma, diarrhoea to venereal causes, leprosy chest complaints etc.

மகாவலி, see மகாவல்லி.

மகாவல்லி, வசந்த மல்லிகை a jasmine creeper of the spring season; 2. வில்வம் bael tree.

மகாவன்னி, சூதம் mercury; 2. see கமலாக்கினி.

மகாவன்னிரசம், சலோதர ரோகத்திற்குக் கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மாத்திரை an Ayurvedic pill given for ascites.

மகாவாதரோகம், நரம்பைப் பற்றிய வியாதி மருந்தினால் தீர்ப்பதற்கு வசப்படாமலும் ஏதாவது ஒரு உறுப்பை நாசப்படுத்தும் வாதரோகங்கள். இது ஆயுள் வேதத்தின்படி 16 வகை. nervous disease such as palsy neuralgia etc.

மகாவிக்கல், அதிக சப்தத்துடன் பிறக்கும் விக்கல், hiccups which produce a feeling or crushing pain at the vulnerable parts stretches out the body in full shaking all the limbs and causes severe thrist. It occurs with a considerable force accompained by a loud sound.

மகாவிஷம், ஏறில் இறங்காத விஷம், an incurable poisonous bite.

மகாவிஷ்ணு, மலையாறு, mountain river.

மகாவிந்து, அப்பிரகம் mica, talc..

மகாவிம்பம், மரகதம் a precious gem; emerald.

மகாவியவீழி, விருசு, a tree.

மகாவியாதி, a deep seated disease seriously affecting the vital principles foreboding a fatal, termination as பிரமேகம், வாதநோய்.

மகாவிருகதி, சேம்பு a garden plant - Colocasia antiquorum caludium nymphaci folium.

மகாவிருக்கம், சதுரக்கள்ளி a kind of square spurge - Euphorbia antiquorum alias E.nerifolia.

மகாவிருட்சம், சதுரக்கள்ளி, see மகாவிருக்கம்; 2. கொடிக்கள்ளி - Sacrostemma intermedium; 3. மராமரம் a tree - Aporosa lindliyama; 4. ஓமை; which see.

மகாவிருட்சாதி, புல்லூரி a parasite plant.

மகாவிருத்தம் see மகாவிருக்கம்.

மகாவிருத்தி see மகா விருகதி.

மகாவில், பேராமுட்டி, a medicinal plant - Pavonia odorata.

மகாவில்வம் a tree - Limonia acidissima, see நாயெலுமிச்சை.

மகாவினிதம், பேராமுட்டி a medicinal plant see மகாவில்.

மகாவின் பால், பசுவின் பால் cow's milk.

மகாவீரம், குயில் a bird - Indian cuckoo.

மகாவெள்ளை, படிகக் கல் a crystal stone.

மகாவேகம், குரங்கு, animal - Monkey.

மகானிலம், தகரை a plant - CAssia tora.

மகான், a great personage.

மகான்னம் - Euruale ferox alias Anneslea spinosa.

மகி, தேவாங்கு, an animal which see.

மகிமை, மூடுபனி mist.

மகிடம், எருமை buffalo.

மகிடரோசனை, கோரோசனை a biliary calculus found in the abdomen of a buffalo.

மகிடி, நரம்பு பிசகல், be sprained; 2. மக்களித்தல் be dislocated, relapse.

மகிந்தகம், எலி rat; 2. கீரி mungoose.

மகிமை, கொங்கணவர் one of the Siddhars named Konganavar, the author of several Tamil Medical Works.

மகிரி, நீலஞ் சோதி a plant which see.

மகிழமரம்,
மகிழம், ஓர் பூ மரம் a flowering tree - Mimusops elengi, Title from the fragrance of its flowers see மகுலம், 2. சீமை மகிழ் a tree - Chrysophyllum coinito.

மகிழம் பழம் fruit of மகிழம் which see.

மகிழ் மலர், மகிழம் பூ, fragrant flower of மகிழ மரம் which see.

மகிளம், see மகிழம்;, 2. பட்டாவியா மகிழம் see சீமை மகிழ்.

மகிளம் பூ, மகிழ மரத்தின் பூ see மகிழ் மலர்.

மகிளி, மயிலிக் கீரை, மகிளியில் இரும்பைக் காய்ச்சித் தோய்க்கப் பொன்னாகும். a kind of vegetable green. It is said to be capable of transmuting iron in to gold.

மகிள், முள் மகிழ் Indian bully tree-Sider-oxylon tomentose.

மகீ, பசு cow; 2. பூமி earth.

மகீசனி, ஐந்திலை நொச்சி, a small tree - vitex negundo.

மகீருகம், மரம், a tree; 2. தாவரம் plants.

மகீலதை, நாங்கூழ் vermiform appendix.

மகுடம், மறைவு as in கண் மகுடம் dimness of the eye.

மகுஷ்டகம் Phaseolus aconite folius.

மகுமம் மார்பு breast; chest.

மகுரக்கா, வழுதலை, brinjal plant.

மகுரம், கண்ணாடி, பளிங்கு mirror; 2. பூமொக்கு flower bud.

மகுலம் see மகிழ மரம் the bark is red and is bitter astringent and mucilaginous. It is a tonic and periodic. Water distilled from flowers is used in melancholia. Flowers though not attractive in appearance is very fragrant. Berries are sweet and eaten.

மகுளம், பல், கவிழ்தும்பை plant = Nepata indica.

மகூலம், மலர்ந்த பூ blossomed flower.

மகேசம், அப்பிரகம் mica.

மகேசுவரி, தீமுறுகல் பாஷாணம் phosphorus.

மகேந்திரகதலி, ஓர் வித வாழை a plantain grown in மகேந்திரம்.

மகேந்திரசாலம், அறுபத்தி நான்கு லைக்கியானத்திலொன்றாகிய ஓர் மாய சாலம் 2 kind of magic being one of the 64 arts and sciences.

மகேந்திரம், மகேந்திரமலை, Eastern ghats.

மகேருகம், ஓர் வகை மலக்கிருமி a kind of worm in the intestine.

மகோதரசுரூபி, முடக்கொற்றான், a creeper; baloon vine palsycurer - Cardiospermum halicacabum.

மகோதம் see மகிழம்.

மகோதயம், அரசமரம் a tree - Ficus religiosa.

மகோதரக் குணம், (மகா + உதரம்)
''மகோதரமான போதே வாய்வதும் நேரேயோடும்
மகோதரமான போதே வாடியே யூதிக் கொள்ளும்
மகோதரமான போதே வயிற்றடி புறங்கால் வீங்கும்
மகோதரமான போதே வந்திடும் குணமி தாமோ.''

an abnormal collection of serous fluid in the peritonial cavity. It is marked by fluctuant painless swelling of the abdomen. It is due to local inflammation of the peritonium or to obstruction of venous circulation - Ascites.

மகோதரம், உடம்பில் வெப்பம் அதிகரித்து நீருண்டாகி உடம்பு கனத்து வயிற்றில் வாயுவும் நீருங் கோர்த்து பெருக்கும். இராக் காலத்தில் வாயு கலைந்து வாதை மிகவுண்டாக்கி நெஞ்சுலர்ந்து தாகம் ஆயாசம் இவைகளை யுண்டாக்கும் ஓர் நோய். கவுசை முற்றி மூன்று திங்களில் அடிகால் வீங்கி, கண் நீலமாயிருக்கும்; நீர் பெருவயிறு see மகோதரக்குணம், 2. சுக்கிலம் semen.

மகோதர வியாதி குணம், நீர் நோயின் குணம் Leucophlegmatic. see மகோதரக் குணம்.

மகோதரன், தீராப்பசியன், a person with revenous appetite which never gets appeased.

மகோந்நதம், பனைமரம் palmyra tree - Borassus flabellifer.

மகோர கட்டம், வெள்ளைப் பூண்டு garlic - Allium sativum.

மகோற்பலம், தாமரை lotus flower.

மகௌடதம், சுக்கு, திப்பிலி வசம்பு the group of three drugs namely - dryginger, long pepper and sweet flag.

மகௌடதி, நன்மருந்து, a common term used or different surgical medicanians.

மக்கடம், மர்க்கடம், குரங்கு animal - monkey.

மக்கம், எருக்கு a plant - Calotropis gigantea.

மக்கலவாயு, பிரசவித்தவுடனே யோனியைச் செவ்வையாய்ப் பிசைந்து வெளிக்காற்று நுழையாதபடி துணியால் இறுகக் கட்டுதல் வழக்கம். அப்படிக் கட்டாவிடில் காற்று நுழைந்து மக்கல வாயு உண்டாகும். a disease caused by mismanagement after delivery; by not putting tight bandage round the abdomen.

மக்கல், பழமையாகி கெட்டுப் போதல் musty.

மக்கல் நாற்றம், ஓர் வகைத் துர்க்கந்தம், கெட்ட நாற்றம் fusty.

மக்கல்லசூளை see மக்கல்லம், ஓர் வித சூலை நோய் see மக்கல் வாயு.

மக்கல்லம், பிரசவித்த பெண்களின் கருப்பையிலிருந்து அழுக்கு சரியாய் வெளிப்படாததினால் ஏற்படும் ஓர் கருப்பு தோஷம். a disease in which lochia of newly delivered woman is obstructed in its exit by the local vayu and thereby causing growths (nodules) below the naval on the sides of the pelvis or of the pubis. Severe piercing pain is felt about the region of naval stomach and bladder.

மக்களிக்கு சுரம், பழஞ்சுரம் relapsing fever.

மக்களித்தல், சுளுக்குதல், sprain; 2. வியாதி மீண்டும் வருதல் relapsing of any disease; 3. புரளுதல், dislocating.

மக்களிப்பு see மக்களித்தல்.

மக்களுறை, மக்கள் மருந்து, medicine intended for human being.

மக்கள், மனிதர் human being.

மக்கனம், அமிழ்தல் drowning.

மக்கனீசம், தங்கம், refined gold.

மக்காசோளம், பெரிய சோளம் அல்லது துலுக்கச் சோளம், Maize - Indian corn - Zea mays alais Holchus sorghum. It is a tonic demulcent, aphrodisiac, alterative. It is beneficial in cases of piles abdominal tumours, boils opthisis.

மக்கா திருநீற்றுப் பத்திரி, ஜப்ஜாவிலை, மிக்க வாசனையுடையதும் சின்னியிலையைப் போன்றதுமான மக்கா தேசத்திய பூடு, இவ்விலையினால் தங்கம் மெழுகாகும், a plant; holy ashes leaf; Ocimum basilicum. Sweet smelling plant; the leaves are used to turn gold into wax like substance.

மக்கி, ஓர் பிசின் gamboge - Stalaginits gambogioides; 2. ஓர் குளிகை a kind of pill; 3. இரேவல் சின்னிப்பால் Rhubarb milk.

NOTE: Product of Garcinia morella - yellow resin imported from China, Siam and Ceylon. It occurs in three forms rolls of solid cylinders or hollow cylinders or cakes inodorous and insipid to taste it is drastic cathartic.

மக்கிகா, எருக்கு mudar plant - Calatropis gigantia.

மக்கிக் கலவை, பிசின் கலப்பு, a compound of gamboge.

மக்கிக் கிழங்கு, இரேவல்சின்னிக் கிழங்கு, which see.

மக்கிசா புகையிலை, மூக்குத்தூள் புகையிலை, tobacco used for preparing snuff.

மக்கிச் செடி, மக்கிப்பிசின் எடுக்கும் மைசூர், கன்னடம் ஆகிய இவ்விடங்களில் விளையும் ஓர் வகைச் சீனச் செடி a kind of tree yielding gambogi.

மக்கிப்பால், சியாம் தேசத்திலிருந்து வரும் ஓர் வகைப் பிசின். செடியில் மஞ்சள் நிறமாக உறைந்த பால் a kind of gum derived from a tree in Siam.

மக்கி மரம் see மக்கிச் செடி Ceylon gamboge - Garcinia morella or G.elliptica; tittle from the colour of the bark whitish clay, tree of 64 ft high, bark turns black on drying thick bark of rusty colour. From tender twigs and fissures in the bark exudes a bright yellow juice which generally dries in the sun.

There is another variety called Siam gamboge tree which is true; one of the best purgatives in this country and a much stronger drug than jalap.

மக்கி முக்கிமரம், ஓர் பிசின் மரம் Indian gamboge tree.

மக்கிறந்தம், பித்தளை brass.

மக்கு, மந்தகுணம் dullness.

மக்குதல், see மக்கல்.

மக்குரு, எலும்பு இளைத்தல் emaciated bone.

மக்குலம், சிலாசத்து, a substance said to be oozing out from mountain.

மக்குலி, மக்மல் ஓர் வகைப் பூடு, a kind of herb.

மங்ககாய் மாங்காய் mango.

மங்கணக்கா, நெல்லிப் பருப்பு seed of Indina goose berry.

மங்கலகரப்புல், அறுகம்புல், the dub grass or devil's grass - Cynoden dactylon.

மங்கலப்பிரதை மஞ்சள் turmeric.

மங்கல வீரியம், ஓர் கொடி a climber.

மங்கலா சுரம், நீண்ட புடலை, snake gourd - Trichosanthes anguina.

மங்கலி, சீதேவி செங்கழுநீர் which see.

மங்கலியகதக், மங்கலியகம், சிறுகடலை small gram.

மங்கலி ரோகம், ஆண் குறியிலும் பெண் குறியின் புழையிலுமுண்டாகும் மீத்தோல் சீழ்க்கட்டி கள்; இதற்கும் கொருக்குப் புண்ணிற்கும் பேதமுண்டு; இது சங்கமத்தினா லேற்பதும் தொத்து நோய், a disease of the genitals of both male and female due to intercourse. It is different from Syphilitic sore.

மங்கல், இறத்தல் - dying; 2. கண்ணொளி குறைதல் duliness of eys sight.

மங்கல்லியம், சந்தனம், sandal.

மங்கல்லீயம், சந்தனம், செவ்வியம், தயிர், பொன் the group of four drugs - Sandal, pepper, creper, curd and gold.

மங்கல் வெளுப்பு pallor.

மங்கல் வெள்ளை paleness.

மங்களியம் அரசமரம் a tree - Ficus religiosa; 2. பாலை Palai tree.

மங்களை, ஆயுள் காலத்தின் ஒரு வகுப்பு, one of the three periods of life.

மங்கார நெய், சுறாமீன் நெய், shark liver oil.

மங்காரம், சுறாமீன் shark.

மங்கிலம் காட்டாக்கினி, wild fire.

மங்கிளிய கெசநாசனி, வன்னி which see.

மங்கு, முகத்திலுண்டாகும் ஓர் மங்கல் நிறமான படை; இது ஓர் துர்க்குறி, see வங்கு, dis colouration of the skin specially in the face; 2. Porcelain.

மங்குத்து வலி, கர்பிணியின் நோய், see மண்குத்து நோய்.

மங்குஸ்தான் ஓர்வகை சீனப்பழம் Mangosteen - Garcinia mangostena.

மங்குஸ்தான் பழவோடு இப்பழத்தின் மேலோட்டை சத்து இறங்கும்படி கஷாயம் வைத்து, பெண்கள் யோனி அல்லது ஆசனம் வெளி தள்ளினால் கஷாயத்தினால் அலம்பி வர சுருக்கமடைந்து உள்ளுக் கிழுத்துக் கொள்ளும். strong astringent; used for dysentery and its decoction for prolapse of anus and uterus.

மங்குரம், பளிங்கு mirror.

மங்குல், இரவு, night, 2. மேகம் cloud

மங்குவிட்டம், அனுமூலு அவரை மொச்சை, field bean - Dolichos lablab (typicus)

மங்கை, கற்றாழை aloe; 2. இரசம் mercury, 3. 12 வயதுப் பெண் girl of 12 years, மங்கைக்கு அமுதம் தங்குமுடம் உதடு.

மங்கை குணமாதர் முந்திரை which see.

மங்கை சரக்கு,
மங்கை நாதம், சுரோணிதம் menstrual blood; 2. பெண் சுக்கிலம் female sperm.

மங்கைமூலி, வெள்ளை நாயுருவி a white species of the plant Indian burr - Achyranthes aspera.

மங்கையக்கன்னி, கற்பூரவல்லி country borage - colens aromaticus alias C.amboy nicus.

மங்கைய நாதம் see தே கொடுக்கியிலை.

மங்கையரை மேவல் பெண் போகம் பெண்களைப் புணர்தல் intercourse with woman.

மங்கையர்பால் முலைப்பால் human breast milk.

மங்கையர் பூத்த நாள் the day of puberty.

மங்கையர் பூப்பு, சூதகம் Menstruration.

மசகம் கொசுரு mosquito, 2. மயக்கம், giddiness; 3. மயிர் hair.

மசகம் பாலுண்ணி, painless black or white eruptions on the surface of the skin resembling pulse in shape caused by aggravated condition of the bodily vayu - Lischen.

மசகி, அத்திமரம் fig tree - Ficus racemosa.

மசகிற்புள், ஓர் கடற்பறவை a species of sea gul.

மசகுதல் சுணங்கல், மயங்குதல் to become giddy.

மசக்கல், தன்வசமாக்கல், to bewitch; to enchant; to charm.

மசக்கு, as in மாதர், கை மசக்கு.

மசக்குதல் கசக்குதல் pressing round; 2. கலக்குதல் mixing; 3. மயக்குதல், to cause giddiness.

மசக்கை, கருப்ப மசக்கு morning sickness of pregnant woman; 2. கருப்பத்தால் தலை முழுக்கு வராதிருத்தல் suppression of menses due to conception; 3. கருப்பிணிக்குச் சாப்பாடிறங்காமல் மயக்கமுற்றிருத்தல் longings of aversions of conceived woman with giddiness.

மசக்கைக்காரி, மசக்கையாக இருக்கும் கருப்பிணி, pregnant woman suffering from morning sickness.

மசங்குதல், மயங்குதல் to get enchanted.

மசதி, கடுகுரோகிணி a medicinal root - Picrorrhiza kurroa.

மசந்த கடுக்கை செழுமலர்க் கொன்றை, large flower cassia - Cassia florida.

மசமசத்தல், தினைவு கொள்ளல் itching.

மசமசப்பு, சொறிவு, itching sensation.

மசமசெனல், see மசமசத்தல்.

மசம், அளவு measure; 2. கொசுகு, mosquito; 3. கோபம், anger, 4. ஒலி sound.

மசரகம், குருவி, a bird - sparrow.

மசரதம், பேய்த்தேர் mirage.

மசரசமலர்,

மசரைப்புழு, குழந்தைகளுக்கு சீதம் கருத்து நுரைத்து கழியும் ஓர் வகை நோய், a disease in children accompanied by black mucus clots; 2. செறி புழு, a kind of worm in the intestine.

மசரோகம், மறு, wart; 2. பாலுண்ணி; lichen.

மசண்டை, அந்தி நேரம் dusk of the evening; sun set.

மசாரகம் இந்திர நீலமணி; a kind of blue stone.

மசாரம், மரகதம், a precious gem - emerald; 2. நீல ரத்தினம், a blue gem - sapphire.

மசாலை, சம்பாரம் condiments; 2. குதிரைக்குக் கொடுக்கும் மருந்து, medicine given for horse.

மசாலைப்புல்.

மசானச் சாம்பல், பிணம் சுட்ட சாம்பல், ashes of the corpse or dead body.

மசானம், சுடலை, cremation ground; 2. மயானம் burial ground.

மசிகாந்த சாதி, சைதன்னிய பிரகாசி சாதியாகிய ஆண் சாதி வகையிலொன்று one of the four classification of men.

மசிதல், நசிந்து குழைதல் to be reduced to a pulp.

மசித்தல், நேக வரைத்தல், grinding to a fine paste or powder.

மசியம், கருஞ்சீரகம், black cumin seeds - Nigella sativa; 2. மிளகு, pepper - Piper nigrum bitter gourd (small variety - a creeper - Momordia charanta.

மெய்மை, உண்மை truth; 2. நினைவு, thought.

மெய்ம்மயக்கம் unconsciousness.

மெய்ம் மறத்தல், உணர்ச்சியறல், becoming unconscious 2. சோர்வடைதல், fainting; 3. தன்னறியாமை to lose one self; 4. மூர்ச்சையாதல், to faint; 5. போதையாதல், to be intoxicated.

மெய்யழற்சி, தோலின் தாபிதம் inflammation of the skin.

மெய்யறிவு, மெய்ஞ்ஞானம் wisdom.

மெய்யனத்தல், உடம்பின் கொதிப்பு உடம்பு கனப்பு rise of heat in the body.

மெய்யனல், உடம்பின் சூடு, தேக வெப்பம், heat of the body.

மெய்யாள் சாரி, ஊன் flesh.

மெய்யிலழல், உடம்பின் வெப்பம், temperature - heat of the body.

மெய்யினைப்பு, உடலினைப்பு a emaciation.

மெய்யிறுகல், body becoming hard and strong.

மெய்யுதகம், சிறுநீர் urine.

மெய்யுளைச்சல், உடம்பினுளைவு pain in the body.

மெய்யுறு புணர்ச்சி, உடலுறப் புணரும் புணர்ச்சி (இதன் எதிர்) உள்ளப் புணர்ச்சி, copulation.

மெய்யெரிச்சல், உடம் பெரிச்சல் burning sensation of the body.

மெய் வருத்தம், உடலுழைப்பாலாகிய அயர்ச்சி, (மெய் வருத்தம் பாரார்) fatigue.

மெய் வருத்தல், to strain the body.

மெய் வலி, தேகக் கடுப்பு pain in the body.

மெய்வழி நீர், அமுரி, urine.

மெய் விழுதல், இறத்தல், dying.

மெய்வெளுத்தல், மெய் வெளுப்பு, body becoming pale; 2. சோகை, anaemia.

மெரிபாவை, ஓர் வகைப் பாவை a kind of பாகற்காய் carilla - small bitter gourd - Momoridica charantia.

மெரிமுக சூலை.

மெருகன் கிழங்கு, ஓர் கிழங்கு, வெருகன் கிழங்கு, பிரமேகம், வயிற்று வலி கபரோகம், சிலேட்டுமாதிக்கம் போம், a bulbous root - Arum macrorhizon.

மெருகி, மருட் கற்றாழை hyacinth aloe.

மெருகு, see மெருகன் கிழங்கு see வெருகன் கிழங்கு.

மெருகுகல், ஓர் வகைக் கருங்கல்லின் பாகம், a principal constituant in granite.

மெருகுள்ளித் தைலம், medicated oil prepared out of garlic and the tuberous root of மெருகு - Good for arthritis and Synovitis.

மெருகெண்ணெய் medicated oil prepared out of the tuberous root of மெருகு.

மெலான் பழம் a melon fruit grown is Cuddappa.

மெலிதல், இளைத்தல் wasting away; emaciating as in consumption.

மெலிதாவிகம், மருது மேற் புல்லுருவி a parasite growning on மருது - Terminalia arjuna.

மெலிந்த, பலமொடுங்கிய unnerved.

மெலிந்த நஞ்சு, weak heart.

மெலிப்பயறு see எலிப்பயறு.

மெலியார் கூந்தல், அம்மையார் கூந்தல், which see.

மெலிவடைதல், growing lean; growing weak.

மெலிவு நாடி, பலமற்ற நாடி feeble pulse.

மெலிவு ரோகம், இளைக்கும் நோய் emaciation.

மெலிவுறல், பலவீனப்படல், growing weak; 2. இளைத்தல், growing thin and weak.

மெல், மெல்லு, மெல்லுதல், chewing.

மெல்ல முடியாமை inability to chew food - Amasesis.

மெல்லிதழ், மிருதுவான பூ முதலியவற்றின் இதழ், petals of flowers; 2. மங்கையர் அதரம் - lips of woman.

மெல்லிய கொத்தான், முடக் கொத்தான், palsy curer - baloon vine - Cardiospermum halicacabum.

மெல்லிய கோசு, முட்டைக் கோசு cabbage - Brassica oleracea capitata.

மெல்லிய சாதிகம் see மராமரம்.

மெல்லிய பூ, மல்லிகை jasmine.

மெல்லியல், மலை வாழை mountain plantain; 2. பெண் lady.

மெல்லிலை, வெற்றிலை betel leaf - Piper betel.

மெல்லிழை, ஆடை முதலியவற்றின் நுண்ணூல் filament; 2. மெல்லிய ஆடையணிந்த பெண் (அன்மொழித் தொகை) a lady wearing thin clothes.

மெழுகாலிகம், மாங்கிளுவை a tree - Mango balsam.

மெழுகு, மருந்திற்கு மூலிகைச் சாறு, செய்நீர் முதலியவைகளாற் சுருக்குக் கொடுத்து அல்லது அவற்றோடு கடைச் சரக்குகளைச் சேர்த்து, தேன், முலைப்பால் முதலியவற்றாலரைத்துத் திரட்டிய பசையுள்ளதான ஓர் வகையான மருந்து, a medicinal wax like preparation prepared by various processes.

மெழுகு, அரக்கு wax; 2. தேன் மெழுக்கு bee wax; 3. இளகல் பதமாய்த் தயார் செய்த மருந்து, a medicinal wax like preparation.

மெழுகுக் களிம்பு, இரணத்தை யாற்றும் ஓர் பூசு மருந்து ointment.

மெழுகுச் சீலை, மருந்து தடவிய சீலைத் துண்டு a plaster; 2. wax cloth coated with bee's wax.

மெழுகுத் திராவகம், வீரம், பூரம், நவாச்சாரம், படிகாரம் ஆக இந்நான்கையும் வாலையிலிட்டு இறக்கிய ஓர் வகைத் திராவகம், an acid distilled from the four drugs corrosive sublimate, alum, ammonium chloride and subchloride of mercury.

மெழுகுத்திரி, wax candle.

மெழுகுத் திரி, பிரமேக நோயாளிக்கு நீர் தாரையிற் செலுத்துமோர் வகை மெழுகு சேர்ந்த திரி a slender flexible wax taper intended for introduction into the urethra of rectum when these passages are obstructed.

மெழுகு தேன், ஈக்கள் மெழுகாலான கூட்டிற் கட்டிய தேன் honey collected by bee's - Ceromel.

மெழுகுத் தைலம், oil distilled from bee's wax and other drugs useful for burns, injury, swelling etc.

மெழுகு நீர், பூநீருடன் சாரம் + பச்சை + பூரம் இவைகளை ஒன்றாகக் கூட்டி செயநீர் விட்டு அரைத்துப் பீங்கானில் வைத்து இராப் பனியில் வைக்க நீராகும். இதற்கு வீரம் சேர்த்திட நீர் சிவந்து மெழுகு நீராகும் (மச்ச 800) pungent liquid prepared from subchloride of mercury, copper sulphate, salt from the fuller's earth.

மெழுகு பதமாய்க் காய்ச்சல், பாகுபதமாய்க் காய்ச்சல், boiling till the ingredients attain a waxy condition.

மெழுகு பதம், மருந்தெண்ணெய் வண்டல் மெழுகு போல் திரளும் பதம், a stage in boiling the medicated oil when the solid ingredients attain a waxy stage not sticking to the fingers.

மெழுகு பனையன், ஓர் வகை அம்மை, a variety of pox.

மெழுகு பாகல், வழவழப்புள்ள பாகற்காய் a smooth bitter gourd, carilla fruit; bitter gourd with smooth surface.

மெழுகு பீர்க்கு, சுணையற்ற பீர்க்கு, வெண்பீர்க்கு, நுரை பீர்க்கு loofa - Luffa aegyptiaca.

மெழுகு பூவிகம், தேன் கூட்டினுள்ளிருக்கும் பூச்சி, the insects in the honey comb.

மெழுகு பேய்ப் பீர்க்கு, கசப்பு வழவழப்புப் பேய்ப்பீர்க்கு; நுரை பீர்க்கு Luffa aegyptiaca.

மெழுகு வகை, இலிங்க மெழுகு, சூதசாம்பிர மெழுகு, இரச மெழுகு தாமிர மெழுகு, சிவப்பு மெழுகு, இலவண மெழுகு, கஸ்தூரி மெழுகு, கோரோசனை மெழுகு, கந்தக மெழுகு, பாஷாண மெழுகு, வீர மெழுகு, the names of different sorts of wax like preparations are given above which see.

மெழுகு வல்லி, வட்டவல்லி a creeper.

மெழுகு வுண்டை, சிரட்டைக் கரியைத் தேங்காயெண்ணை மெழுகுடனே சேர்த்துருக்கி உருண்டை செய்து உறை கல்லில் ஒத்திப் பார்க்க மாத்தினுட பேதமெல்லாம் வகுத்துக் காட்டும் a wax like substance prepared as said above and used to find the fineness or quality of gold.

மெழுகு வெண்டி, சுணையில்லாத வெண்டி, ladie's fingers with out the prickly hairs, smooth surfaced lady's finger - Hibiscus esculentus.

மெழுகெடுத்துத் தங்கமாக்கல், தங்கம் செய்வதாக ஏமாற்றல் playing trick that he would prepared gold.

மெழுக்கு, see மெழுகு.

மெளுகு, see மெழுகு.

மென் புற்று, மிருதுவான சிலந்தி, soft cancer encephaloid - medullary cancer; medullary sarcoma - Mateera cerebriform.

மென்றல், மெல்லல் to chew.

மென்னாடி, soft pulse.

மென்னி, மிடறு, thorat; See மன்னை.

மென்னீர், நன்னீர் soft water.

மே

மேவாழைக் கனிரசம், plantain fruit essence.

மேக கற்பக்கல், முடவாட்டுக்கல் a kind of mineral stone.

மேக காங்கை, வேட்டைச் சூடு venereal heat.

மேக காந்தல், மேக அழற்சி venereal inflammation.

மேக காந்தி, ஓர் மேக நோய், a kind of venereal disease; 2. கிளுவை a tree - balsam tree - Balsmondendron berryi.

மேக காரகப்படை, ஓர் வித வியாதி an eczema caused venereal affection or heat Blenorrhoea.

மேக காரகம், மேகத்தினால் வ சேரும் தோலைப் பற்றிய நே அதாவது கிரந்தி, படை, தடி முதலியன குருக்கள் skin affec due to veneral causes.

மேக காரகம், கைகால் விரல்க காணும் வெடிப்பு, அரி நீர்க்கசிவு.

மேக காரக யெண்ணெய், இதற் குளிமை யெண்ணெய் என் பெயர். சித்தாமணக்கெண்ணெ வெள்ளை வெங்காயம் 5 பங்கு வெந்தயம் ஏலம் வகைக்கு பங்கும் அரைத்து எண்ணெயி கலந்து சூரிய புடத்தி வைத்தெடுத்த எண்ணெய், an oi medicated preparation given for sk affection caused by venereal heat The process is given above which see.

மேகக் குலாந்தகன், 20 வித மேகங்களையும் போக்கும் ஆயுள்வேத மாத்திரை, pill that is said to cure all the twenty varieties of Megam - Venereal affections.

மேகக் கடுப்பு, பிரமேகத்தினாலேற்படும் சுருக்கு, irritation caused by venereal heat.

மேகக் கட்டி, மேக நோயை மருந்து சாப்பிட்டுக் குணப்படுத்தாவிடில் எழும்பும் கட்டிகள், venereal abscess due to the impurities of the blood not being attended to properly.

மேகக் கரப்பன், மேக நோயினால் குழந்தைகளின் உடம்பில் காணும் சொறி சிரங்கு, skin affection of

the children caused by congenital heat.

மேகக் கருவாதி, இஞ்சி - ginger - Zingiber officinale.

மேகக்கல், see மேகக் கற்பகக்கல்.

மேகக் காக்கையோன், சீர்பந்த பாஷாணம், a kind of arsenic.

மேகக் காங்கை venereal heat.

மேகக்காய், கடுக்காய் galinut - Terminellia chebula.

மேகக்கிரந்தி, பெண் சம்பந்தத்தினால் ஏற்பட்ட கிரந்திப் புண் syphilitic sore and bubo.

மேகக்கிரந்தி போக்கி, anti syphilitic.

மேகக்கிராணி, மேக சம்பந்தமாய்க் காணும் ஓர் வகைக் கிராணிக் கழிச்சல், chronic diarrhoea caused by the venereal defects in the system.

மேகக் குத்தல், piercing pain due venereal causes.

மேக சஞ்சாரி, மேகநாத மூலி an herb.

மேக சஞ்சீவி see மேக சஞ்சாரி.

மேக சடை, கருப்பு மனோசிலை, a black variety of arsenic.

மேக சத்துரு, ஆவ்ாரை a black variety of arsenic.

மேகசம், மேகத்திற் பிறப்பன, மேகத்திலுண்டாகிற கோழி முட்டைப் பருமனுள்ள ஓர் முத்து, pearl

மேகசலம், பனிக் குடத்து நீர் liquor amni.

மேக சல வித்தன், பூநீறு salt grown in the soil of fuller's earth during new moon or full moon days.

மேக சாதனி, செம்பருத்தி red cotton plant - Gossypium.

மேகசாரம், கற்பூரம் camphor; 2. காய்ச்சு லவணம், a prepared salt.

மேக சிந்தகம், சாதகப்புள் a bird - lark.

மேக சீவகம், see மேக சிந்தகம்.

மேக சுரம், மேக நோயின் சம்பந்தமாக ஏற்படும் சுரம் fever due to venereal causes - Syphilitic fever.

மேக சூலை, கை கால் குடைச்சல், venereal pains.

மேக சொர்ணக்கல், இராச வர்த்தக்கல் a kind of precious stone - Lapis lazuli.

மேகச் சாயை, நீலம் one of nine gems - Saffire.

மேகச் சாய்,
மேகச்சாய் கையோன், சீர்பந்த பாஷாணம் a kind of arsenic.

மேகச் சிரங்கு, மேக சம்பந்தமாய் வரும் சிரங்குகள், itch due to venereal heat.

மேகச்சிலை, மாக்கல், வங்கக்கல், சிலாவங்கம், graphite.

மேகச் சுருக்கு, மேக நோயினால் ஏற்படும் நீர்க்கடுப்பு dysuria caused by venereal heat.

மேகச்சூடு, மேக வெட்டை gleet - gonorrhoea an inflammatory ailment of the genitals of both sex attended with secretions.

மேகச் சொறி, மேகச் சொறி, சிரங்கு venereal itch.

மேகச் சோரணம் see மேக சொர்ணக்கல்.

மேகதாரி, மயிலிறகு, feather of peacock.

மேக தேகம், மேக நோய் கொண்ட உடம்பு, body affected by venereal complaints.

மேகத் தடிப்பு, உடம்பில் பல விடங்களிலும் வீக்கங் காணல் venereal patches of swelling in several parts of the body.

மேகத் தண்டம், தேங்காய் cocoanut.

மேகத்தருள் சீலை, கருங்கல் granite stone.

மேகத் திமிரம், கருவிழியில் மேகம் கம்மியது போல் இருளடையச் செய்யும் ஓர் கண்ணோய், an eye disease of the pupil.

மேகத் திமிர், மேக வியாதியால் உடம்பிலுண்டாகும் திமிர், benumb due to venereal causes.

மேகேத்திற் களிக்குந்தாசி, மயிலிறகு, peacock feather.

மேகத்திற் பிறந்த வுப்பு, வெடியுப்பு salt petre.

மேகத்தினவு see மேகச் சொறி.

மேகத்தின் கருப்பக்கல் see ஆட்டுக்கல்.

மேகத்தின் விந்து, பூ நாகம் earth worm.

மேகத் தொனியான், அவுரி indigo plant - Indigoferra tinctoria.

மேகத் தோயம், காய்ச்சலவணம், a prepared salt.

மேகநாசம், வெண்காரம் borax.

மேக நாதத்தி மூலி, கட்டுக் கொடி coagulating creeper - Cocculus villosus.

மேகநாதப் பூண்டு, இது ரத்த பித்தம் தாவர சங்கமம் முதலிய விஷங்களைப் போக்கும், a herb.

மேக நாதம், சிறு கீரை small vegetable greens 2. உப்பங் கோரை, which see; 3. பலாசு, a tree - Butea frondosa; 3. மலைப்பச்சை tree yielding white flowers - Xantho chymus pictovius.

மேக நாதரசம், வெள்ளி, வெண் பித்தளை, செம்பு சம பாகங் கொண்டு இதற்கு மூன்று பங்கு கந்தகம் சேர்த்துச் செங்கீரைச் சாற்றால் அரைத்துப் பிறகு கசபுடத்தில் எரித்து எடுத்த ஆ.வே.மருந்து, an Ayurvedic medicine composed of silver, white brass, copper in equal quantities to which is added three parts of Sulphur. The whole mixure is pounded well with the juice of red amaranthus spinose and then calcined in (cowdung 100 cakes) or gajapudam. It is prescribed for all kinds of fever, thirst and burning sensation.

மேக நாதன், நவச்சாரம் chloride of ammonia; 2. சிறு கீரை - Amaranthus.

மேகநாதி, கட்டுக் கொடி coagulating creeper - Cocculus villosus; 2. சுணங்கன் புல், a kind of grass.

மேக நிறத்தி, கருநெல்லி black Indian gooseberry.

மேக நிறப் பாஷாணம், arsenic of black colour.

மேக நிறம், நீலத்தாமரை, blue lotus.

மேக நீர், ஓர் வகை மேக நோய் a venereal disease; 2. நீர், water from the sky.

மேக நீர்ப்பாய்ச்சல், ஓர் வித கண்ணோய், a kind of eye disease.

மேக நீர்க்கோவை.

மேக நோய், மேக சம்பந்தமான நோய் syphilis.

மேக நோய் நூல் Urology.

மேகபதி, கோமேதகம் one of the nine gems Cinnamon stone - Sardonyx.

மேக புட்பம், நீர் water; மழை rice; வஞ்சி.

மேகப் பச்சை, நாகப் பச்சை; மரகதப் பச்சை, green stone, one of the nine gems - Emerald.

மேகப் படலம், ஓர் வகைக் கண்ணோய் an eye disease.

மேகப்படை, மேகசம்பந்தமாக உடம்பில் சருமத்தில் காணும் ஓர் வகைப் படை, a kind of spreading skin disease due to venereal causes.

மேகப்பிடகம், மேகப்புடகை, மேகக் கட்டி, venereal abscess.

மேகப்பிடிப்பு stiffness of joints due to venereal affections.

மேகப்பிரமிலம், urethral discharges due to venereal affections.

மேகப்புடை, தோல் சுறசுறத்து, தடித்து, இள்ளினாலும், காயம் பட்டாலும், தெரியாமல் மறுத்துப் புண்ணாகும் ஓர் வித குட்டம், see திமிர் வாதம், a kind of leprosy.

மேகப் புண், மேக சம்பந்தமான புண், sore due to venereal causes - Venereal sore or ulcer.

மேகப்புரை, மேக சம்பந்தமான புண்ணின் புரை, sinus of venereal abscess or sore.

மேகப்புள், வானம்பாடி sky lark.

மேகப்புறவதம், குதிரை horse.

மேகப் புற்று chronic ulcer due to veneral affection.

மேக மந்தாரம், see மந்தாரச் சிலை.

மேகமாகி, ஆவாரை a shrub - Cassia auriculata.

மேக மாற்றம், மேக நோய் குணமடைதல், curing of the venereal disease.

மேகமுற வஞ்சம், காசிச்சாரம், a kind of salt.

மேக மூத்திரம், நீரிழிவு, passing (a great amount of) copious urine.

மேகமூலி, புல்லாமணக்கு Sebastiana chamaelea.

மேகம், மேக நோய் venereal disease; 2. ஓர் நோய், urinary disease; 3. புண் venereal sore; 4. முகில், cloud; 5. பெண் சம்போகத்தினால் உண்டாகும் ஓர் நோய், disease due to copulation 6. கடுக்காய், gall nut; 7. குயில், Indian cuckoo; 8.

தண்ணீர் விட்டான், water root - Asparagus racemosa.

மேகம், இளமை பருவத்தில் பெண்களை மோகித்து, தினம் போகம் செய்வதினாலும், மந்தம், பசி, செரியாமையாயிருக்கும் பொழுதும், அகாலகாலங்களிலும், முறை தவறியும் புணர்ச்சி செய்வதால் ஏற்படும் ஓர் நோய், a diseases caused by untimely but excessive copulation.

மேகம், நோய் கொண்டவர்களின் சம்பந்தத்தினால் மூத்திரத்திலும் மூத்திர தாரையிலும், மூத்திரப் பையிலும், மூத்திரக் குண்டிக்காய்களிலும் அன்றியும், வேறிடங்களிலும் காண்கிற ஓர் நோய்க்கிட்ட பொதுப் பெயர். This is the common name given to the various affections caused by the sexual union with one suffering from this disease.

The Sanskrit term Meha literally means to micturate. It signifies urination as well as the act of passing any morbid urethral action. Hence, the urine in most of the cases denotes the fact of its being charged with pus or any other morbid secretion of the urinary organs such as albumin, marrow, etc. which imparts their characteristic colours to the fluid.

மேகம் 20:, 1 நல்ல கெந்தன்; 2. உருத்திராங்கன், 3. இந்திரகண்ட; 4. சலதோத்திரன்; 5. அருசிகன்; 6. சிலாங்கன்; 7. இரத்த வர்ணன்; 8. பச்சை வர்ணன், 9. தேன் வர்ணன்; 10. சம்பிராசன்; 11. அனந்தன்; 12. இரத்தின வர்ணன்; 13. நீலகண்டன்; 14. தவன வர்ணன்; 15. அதிபிரமன்; 16. மதுவேகன்; 17. [illegible] 18.

எலும்புருக்கி; 19. புஷ்ப[illegible] 20.......

மேகம் (வாதம்) Vatham.

1. வசாமேகம், urine like [illegible] fat in the urine.
2. மச்சா மேகம், urine [illegible] marrow.
3. சாத்திர மேகம், astringent [illegible] partly sweet urine.
4. அஸ்தி மேகம், passing cop[illegible] urine like elephant in rut.

பித்தம் - Pitham.

5. சார மேகம், urine resemb[illegible] the solution of ashes in od[illegible] colour and taste; excessive aci[illegible] of urine.
6. நீலமேகம், urine dark in co[illegible] - Hematuria.
7. காளமேகம்.
8. அரித்திரா மேகம் (மஞ்[illegible] மேகம்) deep yellow urine w[illegible] pungent taste - Marrow in urine.
9. மஞ்சிஷ்டா மேகம், red ur[illegible] like water reddened [illegible] மஞ்சிஷ்டி - Hae[illegible] porphyrinuria.
10. இரத்த மேகம், hot urine w[illegible] fishy smell and saline taste Hemaglobunuria.

சிலேட்டுமம் Kapha

11. உதக மேகம், turbid or limp[illegible] urine - Polyurea.
12. இக்ஷா மேகம், urine [illegible] solidified if kept for someti[illegible] - Albuminuria.
13. சாந்திர மேகம்,
14. சுரா மேகம் urine like to[illegible] in colour
15. பிஷ்டா மேகம் patie[illegible] undergoing horripillatio[illegible] micturation.

16. சுக்கிரா மேகம், urine resembling semen or appearing mixed with semen.
17. சீகடா மேகம், hard substances like calculus in the urine.
18. சீதமேகம், cold, copious urine sweet in taste.
19. சைநர் மேகம், urine coming out in a little quantity at a time.
20. பாலா மேகம், urine slimy and thready as if mixed with saliva.

Some other varieties.

21. கண்யிக்ஷீ மேகம், Gleycosuria.
22. சுக்கில மேகம், Chyluria.
23. சுக்கிர மேகம், Spermatorrhoea.
24. கல் மேகம், Hemo globunuria.
25. கல்லுடைப்பு மேகம், Gravel in urine.
26. மதுமேகம், Sugar in the urine.
27. சனி மேகம், Mucus in the urine.

மேகம் போக்கி, மர மஞ்சள், tree turmeric; 2. அகத்தி வேர்ப்பட்டை root of Sesbania grandiflora; 3. பாற்சுற்றி, which see.

மேகம் போல் வளர்ந்த கன்னி, கரு நெல்லி, black Indian goosberry.

மேக யெரிச்சல் burning sensation due to venereal cause.

மேக யோனி, புகை, smoke.

மேக ரஞ்சம், கருநாகம் black variety of cobra.

மேகரணக் களிம்பு ointment for venereal, ulcers & sores.

மேக ரணம், மேகத்தினால் வரும் விரண நோய், venereal sore.

மேகரணம், இதுவே கொறுக்கு; இது நோய் கொண்ட பெண்களின் சம்பந்தத்தினால் கெட்ட நீர் ஆண்குறியில் பற்றுவதால் ஏற்படும்; இது மலருக்கு அடியிலிருக்கும் சவ்வின் மடிப்பிலாவது மலரை மூடிக் கொண்டிருக்கும் தோலுக்குள்ளாவது காணும்; ரோகங் கொண்ட பெண்ணுடன் புணர்ச்சி செய்யும்போது யோனியில் தங்கி நிற்கும் மேகரண விஷநீர் ஆண் குறியில் எவ்விடத்தில் படுகின்றதோ அந்த இடத்தில் விரணம் ஏற்படும். புணர்ச்சிக்குப் பின் 4 — 9 தினத்திற்குப் பின் இந்நோய் பிறந்து விரணமுண்டாகும். உடனே தகுந்தபடி சிகிச்சை செய்யாவிடில், உடம்பில் பரவி ஊரல், சொறி, ரணம் இவைகள் கண்டு நீர் பட்டவிடமெல்லாம் அனேக விரணங்கள் ஏற்படும். இவ்விரணத்திற்கடியில் கல் போலும் சில சமயம் மிருதுவாயுமிருக்கும். சில அழுகித் துன் மாமிச வளர்ச்சியுமுண்டாகும். syphlitic or primary sore - Chancre.

மேக ரண்டம், மயிர்க் குருந்து, which see.

மேக ராடி, மேக ரண்டம், மயிலடிக் குருந்து, which see.

மேக ராணி, மயிலடிக் குருந்து which see.

மேக ரோகம், see மேக நோய்.

மேகலாபதம், இடை, waist.

மேகலை, அறைமுடி an ornament worn by female children.

மேக வண்டம், see மயிற் குருந்து.

மேக வண்ணக் குறிஞ்சி, ஓர் மரம், a tree - Lawsonia.

மேகவண்ணப் பூவுள மருதோன்றி, blue nail dye - Barleria is montana.

மேகவரனை, மேகவருனை, அவுரி Indigo plant - Indigofera tinctoria.

மேக வருணனை, see மேகநாத மூலி.

மேக வர்ணக்கல், மந்தாரச் சீலை, a stone - Crystallite, basalt.

மேக வர்ணச் செவ்வந்தி, நீலச் சிவந்தி, blue or black chrysanthem.

மேக வர்ணத்தான், முத்துச்சிப்பி pearl; Oyster shell.

மேகவர்ணனை, see மேகவருணை.

மேக வர்ணன், நாவல் பழம் the jambo fruit - Eugenia jambos.

மேக வழலை, Venereal inflammation.

மேக வறட்சி, மேகத்தினால் ஏற்படும் தாகம், venereal thirst.

மேக வன்னக் குறிஞ்சி, மழை வண்ணக் குறிஞ்சி;, மேக வர்ணப் பூவுள்ள மருதோன்றி, western ghats; blue nail dye - Barleria montana.

மேக வன்னம், அப்பிரகம், mica.

மேக வாகனன், கருங்கல், granite stone.

மேகவாத பிடிப்பு, தன்னால் உணவை உண்ண முடியாது பிறரைக் கொண்டு ஊட்டச் செய்யும் ஓர் வித நோய்; இவ்வித நோய்கள் வெள்ளிப் பற்பத்தால் குணப்படும். venereal arthritis. It is cured by calcined silver.

மேக வாதம், மேக சம்பந்தமாய் வரும் வாத நோய் (venereal) Rheumatism.

மேக வாயு, மேகச் சூட்டினால் பேசிகளுக்கு ஏற்படும் வாயு, flatulency caused in the body by venereal heat. See பேசி வாதம்.

மேக வாய், தயிர் curd.

மேக வார்த்தையறிபவன், தவளை, frog.

மேகே வித்திரதி. மேகக்கட்டி, venereal abscess; 2. இராச பிளவை, carbuncle.

மேக வியாதி, ரோகஸ்திரியை புணர்வதினால் காணும் நோய், see மேக ரோகம், and மேகம்.

மேக விரணம், மேகப்புண் venereal sore.

மேக விருளி, பித்து bile.

மேக வுப்பு, வெடியுப்பு salt petre.

மேக வூறல், மேக நீர்ப்பாய்ச்சல் gonorrhoea; 2. மேக தினவு, itching caused by venereal affections.

மேக வெடி சூலை, Rheumatism due to venereal causes accompanied by sores.

மேக வெட்டை, வெள்ளை நோய் gonorrhoea; 2. ஒழுக்குப் பிரமேகம், பிரமேக வெள்ளை, gleet.

மேக வெள்ளை, வெள்ளை ஒழுக்கு, see வெள்ளை.

மேக வேக்காடு, மேக வழற்சி venereal inflammation.

மேக வேர், சல்லிக் குடல், umbilical cord.

மேகனக் கிளை, மேகன வெலும்பின் கிளை, branch of the pubes -Ramus.

மேகன பாலி ரேகை, பாலி மேகன வரி, iliopectineal line.

மேகனப் பொருத்து, முருந்தினாலும் தசை நாரினாலும் திரண்டு தன்னை யொத்த எதிரெலும்புடன் இணைக்கப்பட்ட பொருத்து, joint of the pubis which is united at its termination to the oppposite as pubis by a thick cartilage ligaments & fibres - Symphysis pubis.

மேகனம், மூத்திரம் urine. 2. ஆண்குறி, penis; 3. மயிரால் மூடப்பட்ட பெண்குறிப் பாகம், pons pubis.

மேகன வளைவு, மேகன எலும்பின் கிளைகளினாலுண்டாகும் வளைவு, arch of the pubes.

மேகன வெலும்பு pubes or share bone, இது ஆசனச் சந்தெலும்பின் முன்னதாகவுள்ள ஓர் சிறிய பாகம். இது பெயரளவாய் தலைசயதம், உடல், கிளை எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது, the pubic bone is the anterior and the smallest part of as innominatum. It is normally divided into head or tubercle, body and ramus.

மேகாகுந்தம், மயிலிறகினடி, bottom of the peacock's feather.

மேகாக்கினி, மீன் fish.

மேகாமினி, நவச்சாரம், chloride of Ammonia.

மேகாயித விருத்தி, swelling.

மேகாரம், see மேகானந்தி.

மேகாரி, ஆவாரை, a shrub - Cassia auriculata.

மேகாரித்தைலம், a medicated oil prescribed for venereal disease.

மேகாரி ரசம், ஆவாரைப் பிசின், resin of the plant - Cassia auriculata.

மேகானந்தி, மயில் peacock.

மேகினி, கிளுவை, a tree - balsam - Balsmodendron berriyi.

மேகை, இறைச்சி flesh.

மேசகம், இருள் darkness; 2. கருமை, blackness; 3. புகை smoke; 4. வெளிர்ப்பச்சை, light green.

மேசகை, கரு மனோசிலை black variety of arsenic; 2. பவள மனோசிலை, red arsenic.

மேசடம், see வியங்கம், 2. முகவங்கு, discolouring patch in the face.

மேஷக புட்பம், வெங்காயம் onion - Allium cepa.

மேடகம், ஆட்டுச் செவிக்கள்ளி a milky plant.

மேஷக்கல், ஆட்டுக்கல், a kind of minereal stons.

மேஷக் கொம்பு, ஆட்டுக் கொம்பு goats horn.

மேஷக்கோடு, ஆட்டுக் கோட்டுப் பாலை, 2. மாட்டுக் கொம்பு, cattles horn.

மேடசிங்கி, புழுக்கொல்லி, vermifuge.

மேஷ சிங்கி, ஆடு தின்னாப்பாளை, a bitter prostate ash coloured plant - Aristolochia bracteata.

மேஷ சிருங்கி, களா விழுதி a plant - Gymnema sylvestre alias G.germinata.

மேட் சுருங்கி, மேஷ சிங்கி, which see.

மேஷப்பால், வெள்ளாட்டுப் பால் goat's milk.

மேஷம்,
மேடம், ஆடு, sheep; 2. ஆட்டுக்கடா he goat -Ram, 3. ஓர் ராசி, in Astrology - Aries (a sign of the zodiac).

மேஷம், வெள்ளாடு goat.

மேட விஷாணிகை, ஆட்டுக்கொம்பு, sheep's horn.

மேஷ விலோசனம், பேரவுரி a big species of indigo plant.

மேஷா, கவுதும்பை which see.

மேடி, (Eng) அமெரிக்க தேசத்திய வோர் மரத்தின் காய்ந்த இலை, இதை தேயிலையைப் போலுபயோகப் படுத்தலாம். இது வியர்வையை யுண்டாக்கி மூத்திரத்தையும் போக்கும். the dried leaves of the tree - Ilex paraguayenars. They are used as Tea and are direutic and diaphoretic - Mate.

மேடியுப்பு, வளையலுப்பு a kind of salt used in the manufacture of bangles.

மேடிறைச்சல், வயிற்றிரைச்சல், noisy bowels.

மேடு, வயிறு stomach; belly.

மேடு தாக்கினி, மிளிறை.

மேடை சிங்கி, see மேஷ சிங்கி.

மேட்டிரம், ஆண்குறி the male organ - Penis; 2. ஆட்டுக்கடா Ram.

மேட்டுத்தாமரை, ஓர் வகைக் கிழங்கு, see புட்கா மூலம்.

மேண்டம், ஆடு sheep.

மேத அகிதம், fally in filtration.

மேதகம், கோமேதகம் one of nine gems - Cinnamon stone - Sardonyx; 2. சவுரிக் கொடி a climber - Trichosanthes palmata; 3. சாலாங்க பாஷாணம் a kind of arsenic.

மேதக விருட்சம் see எருமைக் கனைச்சான்.

மேதகி, மருட் கற்றாழை, a variety of aloes - Aloe hyacinthoides.

மேதக்கிடை, செப்பு நெருஞ்சில், a prostate plant - Indigofera annaphylla.

மேத சத்துவசாரம், வெள்வேல், white species of Acacia - Accacia ferruginea.

மேதச் சவரி see மேத சத்துவச்சாரம்.

மேதச்சி, கற்பரி பாஷாணம் a kind of native arsenice, found in rocks and used in alchemy.

மேத தரம், கொழுப்பு தாது adipose tissue.

மேதத்துவம், தும்பை white flower of a plant - Dyosphyros glutinos.

மேதம், கொழுப்பு fat.

மேதரம், ஆண்குறி penis.

மேத ரோகம், அதிதூல நோய் obesity.

மேதனா, சிறு கீரை a kind of small vegetable greens - Amaranthes.

மேதா, பம்பந் திராய் which see; 2. see கற்றாமரை; 3. மருது மேல்

புல்லுருவி - parasite on மருது Terminalis arjuna.

மேதா விருக்கம், கற்பக விருட்சம், which see.

மேதாவினி, நாகண வாய்ப்புள், a bird - Myna.

மேதி, வெந்தயம், seeds of fenugreek Trigonella faenum grecum; 2. எருமை, buffalo.

மேதிகை, வெந்தயம் fenugreek seed - Trigonella faenum graecum.

மேதிக் கவுணன், மூர்த்த பாஷாணம், a kind of arsenic.

மேதிக் காவிகம், மருத மரம் a tall tree - Terminalia arjuna.

மேதிக் கொம்பு, எருமைக் கொம்பு horn of buffalo.

மேதிச் சாணி, எருமைச் சாணி, dung of buffalo.

மேதிச் சிமிழ், எருமைக் கொம்பினால் செய்த சிமிழ், phial made out of buffalo's horn.

மேதித் தயிர், எருமைத் தயிர் buffalo's curd.

மேதி நவநீதம், எருமை வெண்ணெய், buffalo's butter.

மேதி நெய், எருமை நெய், buffalo's ghee.

மேதிப்பால், எருமைப் பால், buffalo's milk.

மேதிப்பால் குறத்தி, புளி நரளைக் கிழங்கு tuber of புளி நரளை - Vitis carnosa - fox grape root.

மேதினிட வச்சிரம், வைடூரியம் one of the nine gems - Cat's eye.

மேதினித் திரவம், மல்லியிலை, which see.

மேதினி விருட்சம், எருமைக் கணைச்சான், a tree which see 2. சுணங்கன் விருட்சம், a tree used by Siddhar's in rejuvenating the body which see.

மேதே தரை, நிணப்பை container or capsule of adipose tissue.

மேதை, இறைச்சி, flesh; 2. கள் intoxicating drink; 3. மகா மேதை, great intellectual person; 4. அறிவு, knowledge; 5. தோல் skin; 6. நரம்பு nerve; 7. நிணம் fat, adipose tissue; 8. பொற்றலைக் கையாந்தகரை, a plant - Zapavia nodiflora.

மேதை யதிகம், மேதோதாது விருத்தி, increase of adipose tissue.

மேதை யந்தன், செங்குளவி, red beetle.

மேதோ ஆவிருத வாதம், see ஆட்டிய வாதம்.

மேதோகிதம், கருவேல், a tree; black acacia - Acacia arabica.

மேதோ கிரந்தி, இரசாதி வஸ்துக்களைப் புசிப்பதால் உடம்பின் சதையில் அல்லது மேற்றோலில் உண்டாகி வழுவழுத்து மினுமினுப்பாய் பழுத் துடைந்த பிசினைப் போல் சீழ் ஒழுகும் ஓர் வகைக் கிரந்திப் புண், cyst like growth originated from the vitiated condition of the bodily fat it may burst and form an ulcer.

மேதோசம், எலும்பு bone; 2. கருவேல், black acacia tree - Acacia arabica.

மேதோதரம், வயிற்றில் இருக்கும் கொழுப்பு அதிகமாகக் காணல், increase of fat in the abdomen.

மேதோதாது, எலும்பிற் குள்ளிருக்கும் பசை, marrow of the bone - one is white and the other is red.

மேதோதாது விருத்தி, எலும்பினால் பசை அதிகப்படலினால் உண்டாகும் நோய், increase of marrow - this causes disease.

மேதோ பதார்த்த, disturbance of fat metabolism.

மேதோபி காதசம், ஓர் நோய், a disease.

மேதோபூதம், lipoid infiltration.

மேதோமம், lipoma.

மேதோரி, கருவேல், black acacia tree - Acacia arabica.

மேதோ ரோகம், உடம்பிற் கொழுப்பு அதிகரிக்கும் ஓர் நோய் a disease causing increase of adipose tissue in the body.

மேதோ வருவதம், fat originated tumour.

மேதோ விருத்தி, உடம்பின் கொழுப்பு அதிகரித்தல், excess growth of fat in the body.

மேத்தியம், சீரகம் cumin seed - Cuminum cyminum.

மேத்தியாசம், வசம்பு, sweet flag - Acorus calamus.

மேத்திரம், ஆட்டுக்கடா, Ram.

மேநசம், வெண்காரம் borax.

மேந்தி,
மேந்திகை, வெந்தயம், seed Trigonella foenum graecum; மருதாணி a tree - Henna lawsoni alba.

மேந்தியம், மருக்கொழுந்து maid love - Artmesia abrotanum; வெந்தயம் fenugreek seed Trigonella foenum graecum.

மேயன் துவரை, a kind of red -gram

மேரக்காலி, பேய்ப் பிசாசு, demon & devil.

மேரீசன், இலங்கம் cinnabar; Sulphate of mercury.

மேரு, ஓர் வகைக் குப்பி, a kind of bottle used in olden days for preserving the medicines or drugs - காசிக்குப்பி; 2. விணாத்தண்டு, the spinal column; 3. பூரணம் all pervading ether; 4. பொன்மலை, gold mountain; 5. பாண்டத்தின் மேல் மூடி, the lid of a vessel.

மேரு, ஆசவி பீடம் which see.

மேருகம், ஓர் வாசனை fragrance.

மேருக் கேற்றல், காசிக்குப்பி யெனும் புட்டிக்குள் மருந்தை அடக்கல், putting the medicine into the காசிக் குப்பி - Kasiphial.

மேருதண்டம் vertebral column. It is also explained as artery staff which goes from the feet to பிரம்மரந்திரம், which is wrong.

மேரு புவியுடையோன், திகைப் பூச்சி which see.

மேரு விக்களம், பெருச்சாளி bandicoot.

மேரு விரசம், 3 மாதத்திய பிண்டத்தையிடித்து அதினின்று எடுக்கும் சித்து, the essence taken from the three months's old foetus.

மேருவிள வழுக்கை, மூன்று மாதத்திய கருப்பிண்டம், three months old foetus.

மேருவின் வாரி, பொன் மணல் gold ore.

மேலங்கி, மேற்கவசம், the outer cover.

மேலச் சலுகம், சிறுத்தைப் புலி leopard; panther.

மேலாடல், மேற் கொண்டிருத்தல், as in கபம் மேலாடல், intervering.

மேலாதி, இஞ்சி, ginger - Zingiber officinale.

மேலாத்தல், மேற்புறமாக்கல் turning over.

மேலா முதுரம், கஸ்தூரி எலும்பு.

மேலாம்பதி, இரேசகம் emission of the breath by one nostril at a time.

மேலானசத்து, இரேசகம், see see மேலாம்பதி.

மேலான நோன்பு, கௌரி a religious staravation and worship of the Goddess Gowri.

மேலிசைக் குழலான் எலி rat.

மேலிடல், அதிகரித்தல், increasing.

மேலிடுதல், அதிகப்படுதல் increasing as in breath.

மேலி மைத்தாறு, கற்காடக பாஷாணம் a kind of arsenic.

மேலிமை வாதம், dropping of the upper eye did lid from paralysis - Blepharoptosis.

மேலிரைப்பு, மேல் மூச்சு hard breathing.

மேலிளைப்பு fatigue.

மேலுதடு, மேலதரம் upper lip.

மேலூறல், உடம்பினூறல், itching in the body.

மேலெரிப்பு, மேலெரிவு, மேலெரிச்சல், உடம்பெரிச்சல், burning sensation or itching sensation in the body.

மேலெழுச்சி, மேலெழும்பல் rising up - shooting up.

மேலேடு, பால் தயிர் முதலியவற்றில் மேலே படர்ந்து நிற்கும் ஏடு, cream or film deposited on the surface of any liquid as milk etc.

மேலேறு வாயு Udanan, Vayu that goes up.

மேலை, அஞ்சனக் கல், sulpherate of antimony.

மேல், உடம்பு body; 2. அதிகம் excess.

மேல் சுவாசம், மேல் மூச்சு hardbreathing; 2. ஊர்த்த சுவாசம், up drawn breathing. The case where in the patient breathes hurriedly lies unconscious with choked voice and up turned eyes with his vulnerable parts streching out fully with each stroke of breath.

மேல் தினவு, உடம்பின் நமைச்சல், itching of the body.

மேல் மடக்கு, மண் மடக்கில் வைத்து மேல் மடக்கினால் மூடிச் சீலை செய்தல், the dish kept above.

மேல் மருந்து, மேலே தடவும் மேற்பூச்சு External application; 2. அதிகமாகக் கூட்டு மருந்து, medicine prepared in excess; 3. பின்னாகக் கூட்டிய மருந்து, medicine prepared later.

மேல் மல்லி வேர், பேராமல்லி வேர், root of a variety of jasmine பேராமல்லி which see.

மேல் மூச்சு, apnoea.

மேல் மூச்சு வாங்கல், panting.

மேல்மூடி யூர்ந்து நிற்போன், நத்தை Snail.

மேல் மூலம், piles formed in the upper ring of the rectum.

மேல் வயிறு, மேல் நோக்கிய வயிறு, the upper elevation of the stomach epigastrium.

மேல் வயிற்றுக் கர்ப்பம், tubal pregnancy.

மேல் வளையம், மல வாயினுள் பொருந்திய 3 வளையத்தினுள் மேலேயிருக்கும் வளையம், upper most ring of the three rings in the rectum.

மேல் வறட்சி, உடம்பு வறட்சி, dryness of the body.

மேல் வாய், அண்ணம் palate.

மேல் வாய்க் கிரந்தி sore in the soft palate - Syphilitic sore - Gunuma.

மேல் வாய் வாதம், paralysis of the soft palate - Uranoplegia.

மேல் வார்த்தல், உடம்பின் முதலியவற்றை ஊற்றல் water or liquid upon the in fever to reduce the te and calm the nervous Affluision.

மேல் வெளி, superior aper

மேழகம், ஆடு, sheep; 2. கடா, Ram; 3. கஞ்சி, Gruel 4. காடி vinegar.

மேளகம், see மேழகம்.

மேள வயிறு, மேளம் பெருவயிறு, drum like of the abdomen.

மேற் கடுப்பு, external pain.

மேற் கட்டு, bandage.

மேற் கலசம், மேலே பாத்திரம், the upper vessel the mouth of the lower be air tight.

மேற் கவசம் செய்தல், சீலை மண் பூசல், luting.

மேற் கவிசை மகோதரம், மேல் பருத்தலாகிய ஓர் மகோதரம், a kind of enlarging abdomen.

மேற் காது, காதின் மேற்புறம் part of the ear.

மேற்காய் நெல்லி, opposed கீழ்க்காய் நெல்லி.

மேற்கால், ஒலிக்கால், உதானன் one of the vital airs of the 2. காலின் மேற்பாகம், the part of the leg.

மேற் கீ, பாஷாணம் arsenic

மேற் கீழ், மேலும் கீழும் above and below.

மேற் குகா நாளம் superior venacava.

மேற் கோலகி, தட்டைப் பயறு, a pulse.

மேற் சட்டை, dross.

மேற் சிகிச்சை, external treatment.

மேற் சுவாசம், மேல் மூச்சு hard breathing; difficult breathing as in a dying person.

மேற்படி, மேற் கூறியபடி, அதுவே, அதே, as above mentioned.

மேற்பரணை, மேல் தோல் epidermis.

மேற்பலகை, நகம், nail.

மேற்பல்லித முறல், மேலிருக்கும்பல் இதழில் (உதட்டில்) படும்படி பொருந்தல், dental.

மேற்புறச் சுவாச நரம்பு, முள்ளந் தண்டின் உட்புறம் ஆரம்பித்த ஒற்றுணர்வு நரம்புகளுடன் சேரும் நரம்பு spinal accessori nerve.

மேற் புறணி, மேற் பட்டை the outer skin or bark of the tree or any fruit.

மேற் புறை சவ்வு, (in Midwifery) a membrane that is thrown out of the womb after the birth of the child. Tunica decidua uteri. See கீழ்ப்புறை சவ்வு.

மேற்பூச்சு, மேலே பூசு மருந்து, an external ointment.

மேற் பூச்சுத் தைலம் Liniments or embrocation.

மேற் பூச்சு மெழுகு, மெழுகுடன் மருந்து வகைகளைச் சேர்த்துக் கட்டி வீக்கம் முதலானவைகளுக்குத் தடவ, உபயோகிக்கும் மருந்து, a medicinal preparation for external application made with a basis of fat or wax or both - Cerata.

மேற்றாடை யெலும்பு, superior maxillary bone.

மேற்றோலி, மேற்றோல் epidermis.

மேற்றோல், மீத்தோல் cuticle.

மேற்றோற் போக்கல், மேல் தோலை நீக்குதல், to remove the cuticle.

மேனகம், இலவணம், salt.

மேனகை வாரி, குப்பைமேனி rubbish plant - Acalypha indica.

மேனசம், வெண்காரம், borax.

மேனா, தென் ஐரோப்பா சிசிலத்தீவு ஆகிய இவ்விடங்களில் ஓர்வித செடியினின்று கீறியெடுக்கும் பிசின் போன்ற பால், see சீர்கஸ்து, இதனால் இருமல் வேகம் தணியும், a white gummy substance taken from Manna in Scilly etc.

மேனாடு, பொன்னாங்காணி, a medicinal prostate plant - illecebrum sessile.

மேனாதம், மயில் peacock, 2. வெள்ளாடு, goat; 3. பூனை, a cat.

மேனி, உடல் body; 2. உடலுருவம், bodily form; 3. நிறம் colour; 4. வழலைப் பெயர், name of வழலை; 5. கங்கை நீர், pungent liquid obtained from வழலை;, 6.

குப்பைமேனி, a vermifuge plant - Acalypha indica; 7. சர்மம், healthy skin.

மேனி குலைதல், அழகு குறைதல், vaning of beauty; 2. உருவம் மாறல், change of appearance.

மேனி கொடுத்தல், உடம்பிற்கு அழகை உண்டாக்கல், to give lustre and good appearance to the body.

மேனி கொள்ளல், சீவ வுருவம் பெறல், assuming a living body; உடல் காந்தியடைதல், having beauty and lustre of the body.

மேனிச்சாறு, குப்பைமேனிச் சாறு juice of the plant - Acalypha indica.

மேனி மினுக்குதல், giving lustre to the body.

மேனிச்சுன்னம்.

மேனியழகு, உடம்பினழகு, beauty of the healthy skin.

மேனியாயிருத்தல், அழகாயிருத்தல் to keep the body healthy and glossy.

மேனியிடல், தோஷ்டியாதல், to putting on healthy flesh.

மேனியொளி, உடம்பின் காந்தி, bodily lustre or beauty.

மேனிரசம், குப்பைமேனிச் சாறு the juice of the plant - Acalypha indica.

மேனி வலி, உடல் கடுப்பு pain all over the body.

மேனிவெளிறல், உடம்பு வெளுத்தல், paleness of the body indicating anaemia.

மேனோக்கல், மேலேயெழும்பல், moving upwards said of pains etc - Anadromous.

மேனோக்கிய கண், மேனோக்கிய பார்வை strabismus in which the eye is turned upwards - Anoopsia.

மேனோசகம், திலக விருட்சம் which see.

மை

மைசெம்மறியாடு, ram; 2. நீர், water; 3. மலடி, a barren woman; 4. எருமை buffalo; 5. பன்றி, pig; 6. கறுப்பு, blackness; 8. வெள்ளாடு, goat; 9. அஞ்சனம், black magical paint for the eyes; 10. மேகம், clouds; 11. எருமைப்பால் buffalo's milk; 12. ஆடு தின்னாப்பாளை bitter plant - Aristolochia brachtata; 13. ஒரு கருப்பு வர்ணம் - Lampblack; 14. கண்ணிலிடும் மை, colloyrium for the eye. It is prepared thus. The carbon or smoke formed by burning the dried wick soacked in the juice of Eclipta alba in confined air, and mixed with cow's butter. The smoke is usually obtained by fixing a copper pan over the flame.

மைகம், வக்கிராந்த பாஷாணம், kind of arsenic.

மைகரம், மயக்கம் giddiness.

மைகிருத சுரம், ஓர் வகைச் சுரம் a kind of fever மைசாட்சி - buffal eye, from colour of the drug; foreig googul, a gum resin akin to myrr Resin of NBalsamodendro agallocha; வாலேந்தி போளத்தைப் போல குணமுள் சரக்கு, குக்கில் - Bdellium - good bdellium is clean, bright, stick soft sweat smelling, yellowish an

bitter mixed readily with water. The cheaper kinds are used to give adhesiveness and polish to ceilings and pillars.

மைகிறவரை, கலக்கும் வரை.

மைக் கரிப்பான், கருப்புக் கரிசலை, black variety of Eclipta alba.

மைக்காரி, சரக்கொன்னை, a tree - cassia fistula.

மைக்குண்டு மிளகாய், கருப்புக் குண்டு மிளகாய், black round chilly.

மைக் குருந்து, கருங்குருந்து which see.

மைக்குரோதிகம், மிளகு black pepper - Piper nigrum.

மைக்குன்றி, கருப்புக் குண்டு மணி, black jeweller's bead.

மைக் கொவேலி, கருங் கொடிவேலி, black or blue plumbago.

மைக்கொன்றை, மயில் கொன்றை Caesalpinia pulcherrima (குடல்வாதம் போம்)

மைக் கொன்றை, மயிர்க் கொன்றை, இதனால் பிரமேகம், சலமேகம் போம். வயிற்றிலுள்ள வாயுவை வெளிப்படுத்தும், a small tree or shrub - Caesalpinia pulcherrima. It cures urinary, venereal diseases and expells wind from the intestines வாலேந்திர போளத்தைப் போல் குணமுள்ள சரக்கு.

மைக்கொன்னை, சரக்கொன்னை a tree - Cassia fistula.

மைசந்தன், மைச்சமனந்தன், காய்ச்சற் பாஷாணம் a kind of arsenic; 2. ஓர் மருந்து, a chemical.

மைசாட்சி, சீரகம் cumin seeds - Cuminum cyminum; 2. பொன்னாங்காணி, a medicinal prostate plant - illecebrum sessile.

மைசூர்ப் பருப்பு a kind of dholl.

மைசூர்ப்பிசின், ஓர் வகைப் பிசின் Mysore gambage - Garcinia movella; a kind of gum.

மைச் சம்பா, ஓர் வகைச் சம்பா அரிசி, a kind of rice.

மைச் சழட்டி.

மைச் சாடிதம், குக்கில், see மைசாட்சி.

மைச்சாரி, கருங் குறுவை நெல், a kind of black paddy used in diet by Yogis.

மைச் சீரகம், கருஞ்சீரகம் black cumin - Nigella sativa.

மைச் சீரிடம், வேப்பம்பாசி which see.

மைச்சுகி, கருப்புக் கொன்னை, black cassia.

மைச்சூரை, கருஞ்சூரை see சூரை.

மைச்சை, சுக்கிலம், semen; 2. இரத்தம், blood.

மைஞை, மயில் வஞ்சி, a tree.

மைஷ குக்கிலம் see மைசாட்சி.

மைதா மாவு, மரவள்ளிக் கிழங்கு மாவு flour of the root of tapioca - Manihot atilissima.

மைதாலக்கடி, மைதாலக்கிரி, மூசைப் பேயொட்டி;, பிசின்பட்டை, ஓர் கடைச்சரக்கு, மயிலாலக்காடி, wood of Tetranthra Roxburghii; 2. உடைந்த எலும்புக்கூடு.

மைதுனம், புணர்ச்சி copulation; 2. கலவி, uenery.

மைத்திய ரோசினை, கோரோசினை Bezoar orientale.

மைத்திய வருணி, அகத்தியன், the great sage - Agastya.

மைநகர்ப்பூமி, விக்கராந்த பாஷாணம் a kind of arsenic.

மைந்து, மயக்கம் confusion of mind; 2. வலிமை, strength.

மைபற்ற வைத்தல், மை செய்வதற்கு வேண்டி, மருந்தின் புகை மேல் பாத்திரத்தின் உட்பக்கம் பற்றும்படி செய்தல், in the preparation of collyrium to set the copper dish in such a way as to catch the smoke that comes from burning wick see மை.

மைபோலரைத்தல், நெகிழ வரைத்தல், மை போலிடித்தல், to pulverise, to grind till it becomes wax like.

மைப்போளம், கரிய போளம் black bole.

மைமல், மாலை நேரம் evening time.

மைமா, கரும்பன்றி a black hog.

மை முகன், கருப்பு முகத்தையுடைய ஓர் வகைச் சாதிக் குரங்கு a kind of black faced monkey.

மை மை, மலடி a barren woman.

மைம் மீன், சனி மீன் a kind fish.

மையண்டம், முட்டை egg. 2. பாம் முட்டை, eggs of snake; கருங்கோழி முட்டை, egg of t black fowl.

மையம், புருவ மத்தியம், that porti between the eye brows. see பு மையம்.

மையல், ஊமத்தை dhatura - Datu fastuosa; 2. மயக்கம் lust; 3. பெ விரக தாபம் woman's sex passion; 4. போக விருப்பம் sex desire.

மையல்தரு மகாமூலி, சிவகரந்தை plant Ceylon toolsy - Sphoeranth zeylanica.

மையல் தருமூலி, an agent stimulat the sexual passion - Aphrodisia

மையாத்தல், மயங்குதல், fainting.

மையாயிசம், கடுக்காய் gallnut.

மையாளி, கருந்தாளி.

மையி, மிளகுக் கொடி pepper cree - Piper nigrum.

மையிரவி, ஊமத்தைச் சார் juice dhatura see மருளூமத்தை.

மையிலை, ஓர் வகைப் பூடு, a p - Goedonia obtusa.

மையீர்த்தல்,

மையுடை, கருவேல், black a tree- Acacia arabica.

மை பூமத்தை, கருமத்தை black blue variety of Dhatura.

மை ரேயம், ஓர் வகைத் தை a kind of medicated oil.

மை லாலக்கடி, see மைதா லக்கடி, பிசின் பட்டை.

மை வாசிகி, குண்டு பனை, a kind of palm tree.

மை வீடு, செங்கத்தாரி, a shrub - with medicinal bark or root.

மைனகம், see மைகம்.

மைனம், மை a black paint; 2. மீன், fish.

மைனா, நாகண்வாய்ப் புள் bird - Mina.

மைனிகன், கரையான், white ant.

மொ

மொதோள், shoulder.

மொகடஞ்சஞ் செடி, மகிழஞ்செடி a tree with very fragrant flowers - Munusops elengi.

மொகடம் பட்டை, மகிழம் பட்டை bark of the tree Munusops elengi.

மொகத் தாருடம், செங்குளவி, red beetle.

மொக லிங்கம்,

மொகல் அர்ஜக் see மை சாட்சி.

மொகி, கொக்கு a bird - Stork.

மொக்கன், தடித்த ஆள், an athelet; 2. பருத்த ஆள், s stout person.

மொக்கு, பூமொட்டு flower bud; 2. எலும்பு திரட்சி, callus; 3. மிதமின்றிப் புசித்தல், eating voraciously.

மொக்கு, பூமொட்டு flower bud; 2. எலும்பு திரட்சி, callus; 3. மிதமின்றிப் புசித்தல், eating voraciously.

மொக்குள், கொப்பூழ் navel; 2. நீர்க்குமிழி, bubble; 3. அரும்பு, bud; 4. யோனி லிங்கம், clitoris; 5. புறயிதழ் calyx.

மொக்கைச் சோளம், ஓர் வகைச் சோளம், a kind of maize.

மொசகம், வாழை plaintain tree.

மொசம், இலவம் பிசின், the gum of silk cotton tree - Bombax mallabaricum.

மொசுக்கை, see மொசுமொசுக்கை.

மொசு மொசுக்கை, முசுமுசுக்கை, a climber with rough leaves Rough Bryony - Bryonia scabra.

மொசுமொசுப்பு villous growth.

மொச்சரசம்,

மொச்சம், see மொசகம்.

மொச்சி, மலைமொச்சி, mountain lablab.

மொச்சு, மொச்சை, a twiner - Dolichos lablab vartypicus.

மொச்சேலயம், காட்டு மொச்சை, wild Dolichos.

மொச்சை, மொச்சைக் கொடி, a twiner legume - Dolichos lablab vertypica; 2. வெண் மொச்சை, Dolichos yielding white seeds.

மொச்சைக் கொட்டை because seeds of a legume twiner - Dolichos a lablab vartypicus.

மொச்சை நாற்றம், sheep smell.

மொஞ்சி, முலை, woman's breast.

மொடுவார் நங்கை, பாம்பு கடிக்கு உபயோகிக்கும் ஓர் வித வேர், a kind of root used as an antidote in snake poison.

மொட்டகசி, திரா which see.

மொட்டி, பலாவினி which see.

மொட்டு, மொக்கு, bud; 2. இளம்பூ வரும்பு, flower bud.

மொட்டை, தலைமொட்டை Baldness.

மொட்டைச்சி, பூநீறு, fuller's earth; 2. முண்டிணி விருட்சம் which see.

மொட்டைத் தலை, மயிர் வாங்கிய தலை, shaven head; 2. வழுக்கைத் தலை bald head.

மொண்டவன், ஓர் சாமை, see மொண்டி.

மொண்டி, ஓர் சாமை, a millte - Samai - Panicum millare; 2. நொண்டி lame person.

மொத்திக்கால், யானைக்கால் elephant leg - filarial leg.

மொத்தினி, நுரை foam, froth.

மொத்துலவங்கப்பட்டை பெரியலவங்கப்பட்டை, thick variety of cinnamon bark.

மொத்தை, ஆடு goat.

மொத்தைப் பிண்டம், a fetus reduced to a shapeless mass of flesh covered with skin - Anideus.

மொந்தன், மொந்தன் வாழை a va[rity] of plantain; 2. திருவிருத[்] கடுக்காய், a variety of gall growing in Sola nadu.

மொந்தன் வாழை, a kind of l[a] plantain - Musa paradisiaca.

மொந்தன் வாழைக் கச்சல், கிரா[] போம், the young fruits Monthan vazhai - cures diarrho[ea]

மொந்தன் வாழைக் கிழங்கு the co[] of plantain tree. It is duiretic.

மொந்திகா, மலைநொச்சி mounta[in] nochi.

மொந்தின் கடுக்காய், திருவிருத்[] கடுக்காய், gall nut grown in So[la] nadu.

மொந்தை, ஓர் மண் பாத்திர[ம்] earthern vessel.

மொந்தை நாரத்தை, பெருநாரத்[தை] a big variety of bitter orange.

மொந்தைப் பலா, நாட்டுப் பல[ா] country jack tree.

மொந்தைப்பூசினி, பெரும் பூசின[ி] pumpkin Cucurbita pepo.

மொந்தை வாழை, பெருவாழை plantain tree bearing large fruit[s] See மொந்தன் வாழை.

மொமீரி, மொழுன மலையில் விளையும் பீதரோகணிப் பூடு which see.

மொய், அத்தி, fig tree, 2. ஆமை tortoise; 3. யானை, elephant; 4. வண்டு, beetle.

மொய் கதிர், பெண் முலை, woman's breast.

மொய்ப்பு,
மொய்ம்பு, தோள், shoulder.

மொலாம்பழம், முலாம்பழம் melon fruit - Cucumis melon.

மொழி மிரட்டி, ஓர் வகைப்பூடு a herb.

மொழுக்கம்மை, a disease - Scarlatina maligna.

மொழுக்கன், சுரம் மட்டாய்க் காய்ந்து உடம்பெல்லாம் கடுத்து இடுப்புளைந்து, வீங்கி ஏழாம் நாளில் குருதோன்றி மருந்தினால் குணமாகும் ஓர் அம்மை நோய், a kind of pox attended with moderate fever and pain all over the body and swelling - Scarlatina maligna.

மொழுக்கன் பிரண்டை, ஓர் வகைப் பிரண்டை, a variety of Vitis quadrangularis.

மொழுக்கு, மெழுகு Cera wax.

மொழுமை, குங்கிலியம், Indian dammerresin - Shorca robusta.

மொழு வீக்கம், வாதத்தினாலுண்டாகும் வீக்கம், a rheumatic swelling.

மொளி, எலும்பின் அசைவு, joints.

மொளி பெருத்தல், மூட்டு வீங்கல், swelling of the joints.

மொற் பிராய், கூட்டப் பிராய் stumted jack - Streblus asper.

மோ

மோ முகரு, smelling.

மோகடம்

மோகணத்தி, மொந்தை வாழை which see.

மோக நிதப்பிச்சு, அங்க கப்பிச்சு which see.

மோக நீயம், மோகமின்மை want of love.

மோகந்திரிவாள், சாரணை a prostate plant - Trianthema decandra.

மோகந்தீரல், காமமடாய் தணிதல், gratifying sexual desire or passion.

மோக பீராக்கு, மேகவெள்ளைக்கு உபயோகிக்கும் ஓர் சரக்கு a drug used in venereal complaints.

மோக மூட்டும், stimulating the sexual appetite - Aphrodisiac.

மோகம், உன்மத்தம்; பாதிரி; மதியீனம்; முருங்கை; மயக்கம்; காமவிச்சையாலழல்; வாழை, பிதற்றல் முதலிய மொழி பல கூறியதாம். குணங்கள்

மோகரம், மயக்கம் fainting; 2. மோகனவித்தை, magical art.

மோகரி, அசமதாகம் a medicinal seed of omum variety - Pimpinella involuerate.

மோகரித்தல், மயக்கல் to get facinated or enchanted.

மோகலிங்க மரம் ஓர் மரம் a tree - Schretra swietenoides.

மோக விச்சை, காம விகாரம் sexual passion.

மோக விந்து ஆண் குறி penis.

மோக விருட்சம், கருங்காலி rose wood tree - Dalbergia latifolia.

மோகன கோடி, பெருந்தும்பை which see.

மோகனம், அஷ்ட சித்தியிலொன்று one of the eight super human powers - Necromancy; 2. மயக்கம், lust; 3. நீர் விளா, a plant - Schretra swietenoides; 4. புணர்ச்சி, copulation; 5. ஓர் வகைச் சித்தி power attracting woman.

மோகா பாதிரி a tree - Stero spermum suaveolens.

மோகாதி, முக்குற்றம், காமம், வெகுளி, மயக்கம், the three evils incident to the soul viz - sexual passion, anger and delusion of mind.

மோகி, கஞ்சா, Ganja plant - Cannabis indica; 2. மோகங் கொள்ளல் to be facinating.

மோகிதன், காமமுள்ளவன் a passionate man.

மோகிப் பித்தல், காமமுண்டாக்கல், to excite passion.

மோகிப்பு, மயக்கம் sexuality.

மோகிரம், மயக்கம் mental delusion.

மோகினி, ஓர் மாயப் பெண், a facinating woman said to be incarnation of Vishnu, Goddess of love Veneris; 2. ஏழுதரம் சாரணையில் தீர்த்த கவுன குளிகை, a mercurial pill which

with a view to fly in the regions; 3. மிளகு தக்காளி, a - Solanum nigrum.

மோகினிக்குள் மஞ்சினி, புளிகற a hairy creeper - Vitis carno

மோகினி மெறித்தல், நித்திரை விந்து சுழல், wet dream.

மோக்கட்டை, மோவாய்க்கட chin.

மோசகம், வாழை plantain.

மோசகி, கிலுகிலுப்பை rattle - Crotalaria laburnifolia.

மோசகி, கிலுகிலுப்பைச் செடி name of a plant whose fruit rat or crakles in the legumen Crotalaria laburnifolia.

மோசநம் மோசனம், which see.

மோசநி, இலவ மரம், silk cot tree - Bombax malabaricum.

மோச நிரியாசம், இலவ மரம், si cotton tree - Bombax malabaricu

மோசம், முருங்கை durmstick tree Moringa oleifera; 2. வாழை plantain.

மோச ரசம், juice of plantain corm.

மோசனம், ஓர் வகை நெல், a variet of paddy.

மோசா, கருநொச்சி, a black variety of nochi - Vitex negundo; 2 இலவம் பிசின் gum of silk cotton tree; 3. அதிங்கம், which see.

மோசாகம், வாழை plantain.

மோசாசம் பருத்திப் பிசின், the gum of cotton tree.

மோசா சனி, இலவு silk cotton tree - Bombax malabaricum.

மோசாசாகிகம் மருளுமத்தை a variety of Dhatura; burrwied; Xanthiam indicum.

மோசாடம், சந்தனம், Sandal; 2. வாழை, plantain.

மோசா பரணி, பருத்தி, cotton.

மோசிரீ கோபம், வெதுப்படக்கி which see.

மோசி மல்லிகை.

மோசை, அவுரி indigo plant - Indigofera tinctoria; 2. இலவு, silk cotton tree - Bombax malabaricum; 3. வாழை, plantain tree; 4. வசம்பு; sweet flat - Acorus calamus.

மோச்ச ரசம், இலவம் பிசினி, resin of silk cotton.

மோடம், இலவம் பிசின் resin of silk cotton.

மோடனம், அரைத்தல், grinding.

மோடா, பலாவிளி, which see.

மோடாசாம், வெள்ளைப் பூசினி, ash pumpkin - Benincasa cerifera.

மோடி, காற்று wind 2. திப்பிலி வேர், root of long pepper.

மோடு வயிறு belly.

மோட்சகத்தி, செருந்தி, a flower tree - Vehna squanhosa; 2. தக்கோலம், which see.

மோட்ச சத்தி, தக்கோலம், a fragrant drug from a shrub.

மோட்சணம், blood letting.

மோட்சம், salvation.

மோட்டில், குமிழ், a thorny tree - Gmelina tomentosa.

மோணம் பழவற்றல் dried fruits.

மோதகத் தேக்கு, கொழுக்கட்டைத் தேக்கு a tree.

மோதக பாதம், உருண்டை திரட்டும் பாகம், இதுவே லேகிய பாகம், (in medicine).

There are two ways of preparing boluses; some do not require the aid of fire and some require fire. In case of those that do not require fire, the powdered drugs are mixed with the prescribed quantity of treacle. If no treacle is prescribed honey should be used of the same measure as the powder. The boluses are made of according to the prescribed size.

In the case of boluses requiring fire, the treacle of sugar of the same measure as the powder must be mixed with water. twice the measure of sugar and boiled on a slow fire and continued till the products raised by the ladle comes out in thin fibres or thread likes. Then bring the vessel down from the oven, the powder should be thrown into it little by little and stirred well until it is well mixed and a smooth paste. So as to form boluses and then soaked in ghee in porcelein dish.

மோதகக் கெண்டை.

மோத மரம், குதிரை பிடுக்கன் மரம் a tree - Sterculia loetida.

மோதகம், ஓர் பணியாரம், a cake; 2. ஓமம், omum - Carum copticum; 3. கொழுக்கட்டை, a kind of sandwich made of red rice flour and jaggery; குதிரைப் பிடுக்கன் மரம் which see; 4. கொழுக்கட்டைத் தேக்கு, which see.

மோதக வல்லி மரம் see கொழுக்கட்டை மரம்.

மோதமம், வெள்ளுமத்தை dhatura bearing white flowers - Datura alba.

மோதம், ஓமம் Bishops weed - Carum copticum; 2. வாசனை semll; scent.

மோதயந்தி, காட்டு மல்லிகை wild jasmine.

மோதனங்க மூலி சித்தாமணக்கு castor plant bearing small seeds - Ricinus communis.

மோதானி, மல்லிகை jasmine.

மோதானிகம், குடமல்லிகை jasmine bearing flowers with many whorls.

மோதிரி, மோதினி, மல்லிகை jasmine.

மோதிரக்கள்ளி, ஓர் வகைக் கொடி a creeper.

மோதிரக்கன்னி, ஓர் செடி, Title from the rambling habit - Hugonia mystax, Rambling shrub 10-15 ft. with yellow flowers. Bruised roots used in reducing inflammation, tumours, bites of serpents and as a febrifuge and anthelminutic specially for children.

மோதிரக் கொன்னை see மோதிரக்கன்னி.

மோதிர முருந்து, குரல் வளையில் காணப்படும் மோதிரத்தைப் போன்ற வட்டமான முருந்து, Cricoid cartilage.

மோதிர வளையம் annular.

மோதிர வளையப்பூடு.

மோதிர விரல், ring finger - Annular finger.

மோதிரை கெங்கை, சீந்திற் கொடி, moon creeper - Menispermum cordifolium.

மோது கடுக்காய், கடுக்காய்த் தோல், outer skin of the gall nut.

மோது கட்டல்.

மோதை, வசம்பு sweet flag - Acorus calamus.

மோத்தை, வெள்ளாட்டுக் கடா, he goat.

மோப்பம், மூக்கு nose.

மோப்பு, மோப்பம் the organ of smell.

மோம், உரை கல்லில் ஒற்றும் கருப்பு மெழுகு, a black coloured wax with which the rubbed gold or silver on the touch stone is pressed against.

மோர சனம், மோர் சாதம் cooked rice mixed with butter milk.

மோரடகம், கரும்பு வேர், root of sugarcane.

மோரடம், கரும்பு வேர் root of sugarcane; 2. பெருங்குரும்பை வேர், which see; 3. வீழி வேர், which see.